176533

பாவவிமோசன்

1928

JL
M211, N19BV
N26.8.889
176533

OFFICE OF THE ... MADRAS
12 OCT 192

# அறிக்கை

பால விநோதினியின் சந்தா நேயர்கட்கு

அன்பர்காள்!

சிந்திப்பவர்தம் தீவினையகற்றி அந்தமில் இன்பமருளும் பரம கிருபா நிதியாகிய செந்திலாண்டவன் திருவருளாலும் எமது குரு நாதராகிய பிரம்மஸ்ரீ திரு. அ. சிவானந்த சாகர யோகீசுவரரின் ஆசீர்வாதத்தாலும் பால விநோதினிப் பத்திரிகையை எம்மாலியன்ற வரையில் நேயர்களனைவரும் மகிழ்ந்து புகழும் வண்ணம் சிறப்பாக நடத்தி வந்தோமாயினும் எதிர்பாராத பல இன்னல்களின் காரணமாய்க் கடந்த ஆகஸ்டு மாதத்திலிருந்து பத்திரிகையைச் சரியாய் நடத்த இயலாமற்போயிற்று. இது பற்றி நாம் இயம்புதற்கரிய வருத்தமடைந்துள்ளோம். ஆனாலும் அந்த ஆண்டவனுடைய கிருபையால் நமது பத்திரிகையை ஆதியில் அது உலவி வந்தவிதமாக ஒவ்வொரு சஞ்சிகையிலும் இரண்டு படங்களமைத்து அவைகட்கேற்ற விஷயங்களுடன், சிறந்த தாளில், மாதந்தவறாமல் குறித்த தேதியில் பிரசுரிக்க உடன்பட்டு, வாவில்லா—ராமஸ்வாமி சாஸ்திரிகள் அண்டு ஸன்ஸ் என்பவர்கள் சிரத்தையுடன் வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

இவர்கள், தெலுங்கில் இனிப்பிரசுரிப்பதற்குப் புஸ்தகமில்லை என்று யாவரும் புகழும்படி ஆரம்பப் புஸ்தகமுதல் சகல சாஸ்திர இதிகாச புராணங்களையெல்லாம் மிகவும் அழகாக அச்சிட்டுப் பெரும் புகழும் பெற்று வருகிறார்கள்.

சென்னையில், மதிப்புடைய தனவந்தரிலும் யோக்யதையுடையவரிலும் இவர்களும் ஒருவராகையினால் சென்னை, தண்டையார்ப்பேட்டையிலும் பிராட்வேயிலும் பத்து மிஷின்களுடன் கூடிய பெரிய அச்சாபீசுகள் வைத்து வெகு பிரபலமாக நடத்துகிறார்கள்.

இவர்களிடம் நமது பத்திரிகை போய்ச்சேர்ந்தது பெரும்பாக்யமாகும். மேலும் இவர்கள் சிறந்த தேசாபிமானமும் பாஷாபிமானமுமுடையவர்களாகையினாலே கேவலம் பொருளையே பெரிதாகக்கொள்ளாமல் கீர்த்தியையே பெரிதாகக் கொள்ளும் குணமுடையவர்களாகையினால் பத்திரிகை இனி அதாவது வரும் ஜனவரி முதல் மாதந்தோறும் தவறாமல் எல்லோரும் விரும்பத்தக்க அலங்காரத்துடன் வெளிவருமென்பதில் ஐயமில்லை.

நாம் சகல சுதந்தரத்துடன் பத்திரிகையை இவர்களுக்கே ...கையினால் இனி அதாவது வரும் ஜனவரி

TL
N26.8.889
176533

முதல் இவைகளை அதுபற்றிய சகல பொறுப்புகளுக்கும் பாத்தியப்பட்டவர்கள். ஆகையினால் இனிப் பத்திரிகை விஷயமாக எழுதும் எந்தக் கடிதமும் விஷயம் அனுப்புகிறவர்களும் கீழே கண்டுள்ள விலாசப்படி அவர்களுக்கே அனுப்ப வேண்டும்.

அன்பர்களே! பத்திரிகைக்கு நம்மையே பத்திராதிபராக வைத்துக்கொண்டிருப்பதால் நாம் முன்னிலும் அதிக ஊக்கத்துடனும், வழக்கத்துக்கு மாறுதலும் உங்களுடைய குழந்தைகள் படித்து மகிழ்ந்து நல்லபயனடைவதற்கேற்ற விதமாகவும் விஷயங்களை யெழுதி வருவோம். ஆண்டவனுடைய திருவருளையே துணையாகக்கொண்டுள்ள நமக்கு அந்த ஊக்கந்தளரா தென்பது திண்ணம்.

ஆகஸ்டிலிருந்து டிசம்பர் முடிய நடக்க வேண்டிய பத்திரிகைகளும் முடிந்து விட்டன. அவைகள் விரைவில் அனுப்பப்படும். இதுவரையில் எம்மால் ஏற்பட்ட குறைகளொன்றையும் பொருட்படுத்தாமல் எப்போதும்போல் சந்தாதாரராக விருந்து பத்திரிகையை ஆதரித்து வருவதுடன் தங்களுடைய நண்பர்கட்கும் இதைப் பற்றிச்சொல்லிச் சந்தாதாரராகச் சேரும்படி செய்யுமாறு வேண்டுகிறோம். பத்திரிகையை ஆதரிப்பது தருமங்களிலெல்லாம் தலையாயதென்பதையும் அது சமூகத்துக்கே செய்த பேருதவி யாகுமென்பதையும் நீங்களறிவீர்களாகையால் உங்களுடைய கடமையாகிய அதனைக் கடைப்பிடித்து மகிழ வேண்டுகிறோம்.

சென்ற எட்டு வருஷகாலமாக நமது பத்திரிகையை ஆதரித்து வந்த தங்களுடைய பெருங்கருணையை நாம் என்றும் மறவோம்.

தங்கள் அன்பன்

திரு. அ. சுப்ரமண்ய பாரதி.

குறிப்பு:—பத்திரிகையைப்பற்றி விவரம் அறியவிரும்புகிறவர்களும் விஷயதானம் செய்கிறவர்களும் சந்தா அனுப்புகிறவர்களும் கீழே கண்ட இந்த விலாசதாரர்களுக்கே இனி எழுதவேண்டும்.

மானேஜர்,

வாவில்ல. ராமஸ்வாமி சாஸ்திருலு அண்டு ஸன்ஸ்

323, திருவொற்றியூர் ஹைரோட்,

தண்டையார்ப் பேட்டை, சென்னை.

எமது அச்சுக்கூடத்தில் தமிழ் நூல்கள் உயர்ந்த காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப் பட்டிருக்கின்றன.

## விற்பனைக்குத் தயாராக இருக்கும் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| குமரேச சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 5 |
| கோவிந்த சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 2 |
| அறப்பளீசுர சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 5 |
| திருவேங்கட சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 5 |
| தண்டலையார் சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 3 |
| கந்தர் கலிவெண்பா பாட்டும் குறிப்பும் | 0 | 1½ |
| திருமுருகாற்றுப்படை பாட்டும் குறிப்பும் | 0 | 2 |
| சரஸ்வதி அந்தாதி பாட்டும் குறிப்பும் | 0 | 1¼ |
| நால்வர் நான்மணி மாலை பாட்டும் குறிப்பும் | 0 | 1¼ |
| அபிராமி யந்தாதி பாட்டும் குறிப்பும் | 0 | 1¼ |
| மனுமுறைகண்ட வாசகம் | 0 | 5 |
| இராஜரிஷி தமிழ் மொழி பெயர்ப்பு நூல் | 1 | 4 |
| மகாதேவன் ஒரு தமிழ் நாவல் | 0 | 12 |
| சந்திரகுப்தன் ஒரு இனிய தமிழ் நாவல் | | ... |

நாம் தமிழில் இன்னும் பல நூல்களைப் புதிதாக வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். இப்பொழுது அவைகளில் சில அச்சிடப்பட்டு வருகின்றன.

V. RAMASWAMY SASTRULU & SONS,

*292, Esplanade, Madras.*

# V. RAMASWAMY SASTRULU & SONS

***PRINTERS, PUBLISHERS, BOOK-SELLERS***

***AND***

***TYPE FOUNDERS***

**SANSKRIT BOOKS**

IN DEVANAGARI CHARACTERS

AND

IN TELUGU CHARACTERS

ALSO

**TELUGU BOOKS**

**TAMIL BOOKS**

AND

**ENGLISH BOOKS**

**323, Tiruvottyur High Road,**

**Tondiarpet,**

***MADRAS.***


உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


தொகுதி 8 | 1926 ௵ ஆகஸ்ட்-ஸெப். | பகுதி 8 & 9


### தெய்வ வணக்கம்

நிலையுறு நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு
நிகழ் சாந்தமாம் புதல்வரும்
நெறிபெறும் உதாரகுணம் என்னும் நற்பொருளுமருள்
நீக்கு மறிவாந் துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மன மென்னும் நல்லேவலும்
வருசகல கேவலமி லாதவிட மும்பெற்று
வாழ்கின் றவாழ் வருளுவாய்
அலையிலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுத மலர்வாய்
அணிகொள் பொற்கொடி பசுங்கொடி யிருபுறம்படர்
அழகுபெற வரு பொன்மலையே
தலைவர் புகழ் சென்னையிற் கந்தகோட்டத் துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

(திருவருட்பா.)

# ஹிதோபதேசம்

தங்கத்தை நெருப்பிலிட்டு உருக்கினால் ஒளி குன்றுமா? சந்தனக்கட்டையைத் தேய்த்தால் அதன் மணம் குறையுமா? சங்கம் நெருப்பில் வெந்தால் அதன் பொலிவு குறையுமா? பாலை நன்றாய்க் காய்ச்சினாலும் சுவையிற் குறைவுறுமா? மணியைச் சாணையிலிட்டுக் கடைந்தாலும் அதன் இயற்கைக் குணம் மாறுமா?—மாறாது. இதுபோல் மேலோர் எந்த அவஸ்தையிலும் தம்முடைய தூய நிலை தவறிடார்கள்.

2. தீயவனுக்கு எவ்வளவு கற்றுக்கொடுத்தாலும் அவன் நல்லவனாகமாட்டான். கெட்ட இரும்பினாலே செய்த கத்தி நல்ல கத்தியாகுமோ? ஆகாது. நந்தவனத்தில் மழை பெய்தால் ரோஜா முதலிய நல்ல புஷ்பங்கள் புஷ்பிக்கும். உப்புநிரம்பியகளர் மண்ணிலே பெய்தால் புல்லும் முளையாது. நல்லவனுக்குச் செய்யும் போதனையே பயன் தரும்.

3. ஒரு வேந்தனைக் கைதி ஒருவன் முன்று முறை வென்று வைதான். அரசனுக்குப் பக்கத்திலிருந்த மந்திரிமாரிருவரில் நல்ல குணமுள்ள ஒருவன்

176533



"வேந்தே, உம்மை 'ஏழைகளுக்கு இரங்கும் உத்தமர். குற்றவாளியை மன்னிக்கும் இயல்புடையவர்' என்று கைதி புகழ்கிறான்" என்றான். பொறாமைக்குணமுடைய மற்றொரு மந்திரி "பிரபுவே, கைதி உம்மைத் திட்டுகிறான். அதை இவர் மறைத்துப் பேசுகிறார்" என்றான். அரசன் "உம்முடைய இந்தப் பேச்சு எனக்குக் கோபத்தை உண்டாக்குகிறது. அவருடைய வாய்மொழி எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. அவர் சமாதானத்தை விரும்புகிறார். நீர் சண்டையை விரும்புகிறீர்: ஆகலின் உம்மை நான் வெறுக்கிறேன். சச்சரவை உண்டாக்குகிற மெய்யை விடச் சமாதானத்தை உண்டாக்கும் பொய்யே மேலானது" என்றான்.

4. ஆகாயத்தில் விளங்கும் நக்ஷத்திரங்களுக்கு ஆபரணம் சந்திரன். மாதர்களுக்கு ஆபரணம் பதி. பூமிக்கு ஆபரணம் செங்கோல் அரசன். ஆனால் எல்லோருக்கும் எல்லாவிடத்திலும் ஆபரணமாக விளங்குவது கல்வியேயாம். ஆகையினாலேதான் ஒருவன் உருவமும் அழகும் வாய்ந்தவனாயிருந்தாலும் அவன் கல்வியறிவில்லாதவனானால் அவனை மணமற்ற அழகிய முருக்க மலருக்குச் சமானமாகக் கூறுகின்றனர் பெரியோர்.

5. சந்தனச் சோலையிலுள்ள வேறு விருக்ஷங்களும் வாசனையடையும். மகமேருவை அண்டியிருக்கும் காகமும் பொன்மயமான சாயல் பெறும். பாலு

டன் விளங்கப் பட்ட நீரும் பால் நிறமடையும். படிக மணிகளுக்குள்ளே சிம்பென்ற வட்டமும் அந்த மணியின் குணத்தைக்காட்டும். மரகதக்கல்லை அடுத்ததும் பசுமை நிறமே காட்டும். அதுபோல் பெரியோரிடம் சகவாசம் செய்பவர்களும் அவர்களுடைய நல்ல குணங்களை அடைந்து மேன்மையடைவர்.

## பெரியாரைத் துணைக்கொள்

பெரியாரைத் துணைக்கோள் என்னும் இச்சிறு வாக்கியம் ஔவைப் பெருமாட்டி அருளிய ஆத்திசூடி என்னும் சிறு நீதி நூலிலேயுள்ள போதனையாம். இந்த அமுதமொழி மக்களுடைய அறிவின்பொருட்டு, வெளிவந்துள்ளதாதலின், மக்கள் இதனைத் தாம் கொள்ளவேண்டிய விதிகளுள் ஒன்றாகக் கொள்ளவேண்டும். ஆத்திசூடியென்னும் சிறு நூல் அரிய பெரிய பொருளுடையது. அதிலுள்ள அமுத மொழிகள் சிந்திக்குந்தோறும் உள்ளத்தில் உயர்ந்த நிலையை நிலைநாட்டி உயிர்க்கு உறுதியளிக்கும் தன்மையன. இளவயதில் மனப்பாடமாகச் செய்யும் அந்த நூலின் அமுதமொழிகள், முதிர்ந்த வயதில் ஒவ்வொரு சமயங்களில் நினைப்பிலே தோன்றி அநுபவத்தை மெய்ப்பிக்கும். அக்காலத்தில் அந்நூலின் பெருமையும் அதனைக் கருணையினாலே உலகுக்குணர்த்திய பெரியாரின் பெருமையும் இனிது விளங்கும்.



மக்கள் உலகவாழ்க்கையை நடத்துவதன் பொருட்டுக் கொள்ளவேண்டிய துணைகளில் பெரியாரைத் துணையாகக் கொள்ளவேண்டியது மிக மிக அவசியமாம். பெரியாரைத் துணையாகப்பெற்றவர் ஒருபோதும் தாழ்வதில்லை; சகலபாக்கியங்களையும் பெற்று நல்லவரென்னும் பேர் பெறுவர். தெய்வாநுக்ரகத்திற்கும் பாத்திரராவர். பொதுவில் மக்களுக்குச் சாதாரணமாகத் துணைவலியாயுள்ளவை, அறிவு, ஆண்மை, பொருள், சுற்றம், தக்கவசதி முதலியனவாம். இவற்றினும் பேரறிவு, பேராற்றல், பெருங்கருணை முதலிய அருங்குண முடையவரே பெரியாராவர். அவருடைய ஆதரவைப் பற்றுக்கோடாய்ப் பெற்று வாழ்வை நடத்துதல் பெருமை தருமன்றோ?

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

என்ற தமிழ்வேதத் திருவாக்கே இதற்குப் போதிய சான்றாம். இதனை அநுபவவாயிலாக அறியலாம்.

தசரத சக்ரவர்த்தி இராஜ்யபரிபாலனம் செய்து வந்த காலத்தில் அவரிடம் விசுவாமித்திரர் என்னும் ஒரு பெரியவர் வந்தார். அவர்மகாமகிமை வாய்ந்தவர்; தவத்திலே சிறந்தவர்; நினைத்தமாத்திரத்தில் பிரமஸ்ருஷ்டிகள் யாவையும் ஸ்ருஷ்டிக்க வல்லவர்; சாபாநுக்ர சத்திவாய்ந்தவர்.

நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" என்னும்

யேதத் திருவாக்கை நிரூபித்துவிட முற்பட்டவர். முதலில் இவர் ராஜரிஷியாயிருந்தார்; இவர் மகா கோபிஷ்டர்.

இவர் வரவைக் கண்டதும் தசரத சக்கரவர்த்தி சடக்கெனத் தமது ஆசனத்தை விட்டெழுந்து எதிரோடி நமஸ்கரித்து வரவேற்று, "தங்களுடைய வரவு எங்கள் பாக்கியம்" என்று விநயமாகக் கூறி அழைத்துவந்து பொற்பீடத்திலே வீற்றிருக்கச் செய்து, "வந்த விசேஷம் யாதோ?" என்று பயபக்தியோடு கேட்டான்.

மகரிஷி, மன்னர் மன்னனைப்பார்த்து, "அரசே! உமது பெருமையை நீரே உணரவில்லை போலும், யானும் என்னை போன்ற முனீந்திரரும் இமையா விழிகளையுடைய தேவர்களும் ஆபத்துக்காலத்திலே அடைக்கலம் புகுமிடம் இவையன்றே. அவற்றுள் பல மலைகளும் பணிதற்குரிய கைலையங்கிரி என்னும் பனிவரை ஒன்று; திருப்பாற்கடல் மற்றொன்று; பதுமாசனத்தையுடைய பிரம லோகம் வேறொன்று; கற்பகத்தருவினையுடைய ஸ்வர்க்கம் பிறிதொன்று. இவ்விடங்களிலே புகலற்றவர் முடிவாக வந்து அடையுமிடம் மணிமயமான மாடமாளிகைகளை யுடைய அயோத்தியென்னும் இந்தத் திருநகரமாம். இவற்றைத் தவிரப் புகலிடம் வேறெங்குண்டு? நான் மிகுத்துச் சொன்னதாக எண்ணுவது கூடாது. உண்மையையே இயம்பினேன்" என்றார்.



இதைக்கேட்டதும் வேந்தன் அளவுகடந்த ஆனந்தமடைந்து, தன் இருகரங்களையும் கூப்பி நின்று "மகரிஷியே, யாவும் தங்கள் பொருளே! தங்களைப் போன்ற யதீசுவரர்களின் கிருபா நோக்கத்தினாலேயே அடியேன் யாதொரு குறைபாடுமின்றி அரசு புரிந்து வருகிறேன். தாங்கள் யாது காரணமாக இங்கெழுந்தருளியதோ தெரியவில்லை. தெரிவிப்பின் அந்தப் பணியைச் சிரஸா வகித்துச் செய்யக்கடவேன்" என்று அமைதியோடுரைத்து ஆசனத்தமர்ந்தான்.

கௌசிகமுனிவர், வேந்தன் திருமுகத்தை நோக்கி, "அரசரேறே பிரமாத மொன்றுமில்லை. யாகமொன்று செய்யவேண்டும். அதற்குப் பெருந்தடையாயிருப்பவர் அசுரர்கள். முனிவர்கள் செய்யும் தவத்தைக் கெடுப்பதே அவர்களுக்குத் தொழில். தவமியற்றும் முனிவர்கள் சாந்தகுண சீலராயிருக்க வேண்டியவர்கள். அதனால் அவர்கள் தங்கள் தவம் நிறைவேறுமட்டும் வேறு சிந்தையில்லாதவர்களாயிருக்க வேண்டும். அவர்களுடைய தவத்திற்கு இடையூறுண்டாகாதபடி காப்பது அரசருடைய கடமை. 'தவமும்-அரசிலாரில் வழியில்லை' என்பது முறைமையல்லவா? அதனை யுத்தேசித்து உன்னிடம் வந்தேனே யொழிய வேறு காரியம் ஒன்றுமில்லை" என்றார்.

வேந்தன் "அப்படியாயின் அடியேன் தன்னியனானேன். யானும் என்குடிகளும் க்ஷேமமடைவது காலமழையினால். அந்தமழை 'தவமிலாரில்வழியில்லை'"

ஆதலால் தங்களைப்போன்ற மகரிஷிகளுக்கு வேண்டியதைச் செய்ய மன்னவர் கடமைப்பட்டவரல்லவா. தாங்கள் நிர்ச் சிந்தையாய்த் தவம் செய்யலாம்" என்றான்.

விசுவாமித்திரர் மனமகிழ்ந்து, காவலன் திருமுகம் பார்த்து, "பிரபுவே, உமது பிள்ளைகள் நால்வரும் நீடூழிவாழக்கடவர்! அவர்களுள், 'மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ' என்று சொல்லத்தக்க திருமேனியுடையவனாகிய உமது மூத்த குமாரனை மட்டும் எனக்கு வழித்துணையாகவும் யாகசகாயனாகவும் இருக்க என் பின் அனுப்பித்தரவேண்டும்" என்று கேட்டார்.

இந்தச் சொல்லானது வேந்தனுடைய செவியில் பழுக்கக் காய்ச்சிய நாராசம் போல் விழுந்தபடியால் அவன் மனங்கலங்கி நிலை தளர்ந்தான்; உயிருண்டோ இல்லையோ என்னும்படி மூர்ச்சித்தான்; கண்ணில்லாதவன் நோற்றுப் பெற்ற கண்ணை இழந்தது போலவுமானான். முனிவர், என்ன இவன் செயல் என்றெண்ணித் திகைத்தார். அரசன் சற்று நேரத்திற்கெல்லாம் தன்னை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு முனிவரை நோக்கி, 'ஸ்வாமி, இராமனையா கேட்கிறீர்? அவன் இன்னும் சின்னஞ் சிறுவன்; ஆயுதம் பிடிக்க அறியான். அவனாலென்னவாகும்? அடியேனிருக்கிறேன் உமக்குத் துணையாய். உமது வேள்விக்கு இடையூறு செய்வோர் அசுரரேயல்ல; வேறு யாவரேயாயினும் அவர்கள் செய்யும் விக்கினத்துக்கு விக்கினமாகயானே



எதிர்நின்று உமது யாகத்தை நிறைவேற்றுகிறேன். இதோ புறப்படுகிறேன். தயை செய்யவேண்டும்" என்றான்.

வேந்தன் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே மகரிஷிக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் "தசரதரே; இராமனை நீர் அறியீர்; நானறிவேன். என் வார்த்தையை நீரா தடுப்பவர்?" என்று கோபங்கொண்டார். இந்தக் கோபக் குறிப்பைக் கண்ட சபையார், "அந்தோ,

'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது' ஆயிற்றே;

இது எவ்வாறு முடியுமோ?" என்று கலங்கினார்கள். இப்பொழுது முனிவருடைய மேல் நோக்கிய கடைப்புருவமிரண்டும் நெற்றியை மூடிக்கொண்டன. கோபச் சிரிப்புகள் கொழுந்து விட்டெழுந்தன. கண்கள் சிவந்தன. திசைகளும் இருண்டன.

இவ்வாறு கோபங் கொண்ட விசுவாமித்திரரின் கருத்தை அறிந்த வசிஷ்டமுனிவர், பரபரப்புடனெழுந்து அவரைப் பொறுத்துக் கொள்ளுமாறு உபசரித்து, சக்கரவர்த்தியைப் பார்த்து, "பூபால, ஸ்ரீதேவி தானே வருகிறாள். உமது தவச் செல்வனுக்கு நல்ல காலம் வருகிறது. மழை வெள்ளம் கடலை நோக்கிச் செல்வதுபோல் அளவற்ற வித்தைகள் உமது மைந்தனை அடைய எதிர்பார்க்கின்றன. இந்த நல்ல சமயத்தை நீர் இழந்து விடலாமா?—

'எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரியசெயல்'

என்னும் கட்டளையை மறப்பதாமோ? ஒன்றும் சிந்தியாதே; உடனே மகரிஷியுடன் உன் மைந்தனைக் கூட்டி அனுப்பு" என்று கட்டளையிட்டார்.

குருநாதனுடைய கட்டளை யாகையினால் அரசன், அதனைத் தனக்கு நன்மை தருவதென்று நம்பிக் கவலை யொழிந்து கமலக்கண்ணனாகிய ஸ்ரீராமனை ஸபைக்கு வரவழைத்தான். ஸ்ரீராமன் வந்ததும் அங்குள்ள பெரியோர்களை வணங்கித் தன் தந்தையையும் வணங்கி அவர்முன் கரங்குவித்து நின்றான்.

வேந்தர்பெருமான் மைந்தனைக் கண்குளிர நோக்கி, "அப்பா, இதோ இருக்கின்றாரே, இவர் மகா பெரியவர், இவருடைய திருவருள் பெற்றோரெல்லாரும் மேன்மையடைந்திருக்கிறார்கள். இவர் உன்னை எல்லா விதத்திலும் மேன்மையடையும்படி செய்ய சித்தங் கொண்டிருக்கிறார். நீ மிக்க பயபக்தியுடன் இவரோடு சென்றுவா. 'மூத்தோர் சொல் வார்த்தையமிர்தம்' என்னும் மூதுரையைக் கடைப்பிடித்து இவர் சொல்லுகிறபடி நட. உனக்கு மங்களமுண்டாகும்" என்று வாயார வாழ்த்தி இலக்ஷ்மணனையும் வரவழைத்து இருவரையும் முனிவரிடம் ஒப்புவித்தான்.

விசுவாமித்திரர் இராம லக்ஷ்மணரிருவரையும் தம்முடனழைத்துக்கொண்டு எல்லோரிடமும் விடை



பெற்றுச்சென்றார். அவருடன் சென்ற ஸ்ரீராமன் தனது மலைபோன்ற தோளிலே வெற்றியைத்தரும் ஒரு வில்லையும் வாய்மையைப்போல் என்றும் அழிவு பெறாத அக்ஷயத் தூணிகளையும் எடுத்துக்கொண்டு சென்றான்.

மூவரும் அயோத்திமா நகர எல்லையைக் கடந்து சென்றனர். அங்கு அவர்கள் சரயுமாநதியைக் கண்டனர். இப்போது சூரியாஸ்தமனமாயிற்று. மூவரும் அந்த நதியில் அந்திக் கடனை முடித்துக்கொண்டு அருகிலிருந்த ஒரு பூம்பொழிலுக்குச் சென்றனர். அந்தப் பொழிலில் தபோதனர் செய்யும் யாகப்புகை சூழ்ந்திருந்தது. அவ்வாறு விளங்கிய அந்தப்பொழிலைக்கண்ட இராஜபுத்திரர்கள் வியப்படைந்தனர்.

அப்பால் மூவரும் அப்பொழிலைக்கடந்து ஒரு பாலைவனத்தை யடைந்தனர். அந்தப்பாலைவனம் நீர்ப் பசை சிறிதுமில்லாமல் வறண்டிருந்தது. வெயில் வெகுகடுமையாக அடித்தது.

"படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியவே முடிய சுடுகுறும் வான் முகமெலாம்
விடியுமேல் வெயிலும் வேம் மழையும் வே மின்னினோ
டிடியும் வேகு மென்னில் யானவே வாதவே."

என்றபடி வெப்பந் தாங்க முடியாமலிருந்தபடியால் இராமலக்ஷ்மணர்களிருவரும் இதனை எவ்வாறு கடப்பதென்று மலைத்தனர். அதுகண்ட முனிவர்

அவர்களுக்கு இரண்டு வித்தைகளை உபதேசித்தார். அதன்பிறகு அவர்கள் அந்த வனத்தைக் கஷ்டமின்றிக் கடந்துசென்றனர்.

போகும்போது விசுவாமித்திரர், "இது தாடகை யென்னும் ஓரரக்கி வசிக்குமிடம். அவள் தான் எண்ணியவைகளை யெல்லாம் செய்யவல்லவள். மாயவித்தையில் அவளையொத்தவர் தேவலோகத்திலுமில்லை. அவள் பேருக்குப் பெண் வடிவத்தோடு தோன்றினும் உண்மையில் பெண்ணல்ல. அவளைக் கொல்லவல்லவன் நீதான். அவளொழிந்தால் உலகம் சுகமடையும். உன் வில்லம்புகளை ஆயத்தப் படுத்திக்கொள்" என்று சொன்னார். சொல்லி வாய் மூடுவதற்குள், ஒரு கருத்த பருவதம் பெயர்ந்து விட்டெறிந்துகொண்டு வருவது போல் தாடகையென்னும் அரக்கி தோன்றினாள்.

அவளைக்கண்டதும் ஸ்ரீராமனுக்கு இரக்கமுண்டாயிற்று. "பெண்ணென்றால் பேயுமிரங்கு மென்பது பழமொழியல்லவா? இவளை ஆண்மகனாகிய நாம் எப்படி வதைக்கலாம்?" என்று யோசித்தான். அப்போது முனிவர்,

"தீதென்றுள்ளன யாவையுஞ் செய்தெமைக்
கோதென்றுண்டில ளித்தனையே குறை
யாதென் றெண்ணுவதிக் கொடியாளையும்
மாதென் றெண்ணுவதோ மணிப்பூணினாய்?" என்றார்.



குருமொழியைக் கடப்பது கடனன்றென்றுணர்ந்த தாசரதி வேறுபேசாமல் அக்கணமே அவள்மீது பாணமெய்து அவளைக்கொன்றான். அதன் பின் விசுவாமித்திரர் வேள்விசெய்யும் இடத்துக்கு மூவரும் சென்றனர். அங்கே விசுவாமித்திரர் ஸ்ரீராமலக்ஷ்மணர்களைக் காவல்வைத்துவிட்டுத் தம் யாகத்தைத் தொடங்கி நடத்தி முடித்தார். அப்பால் முனிவர் இராம லக்ஷ்மணர்களை ஆசீர்வதித்து,

"அறிவமைந்த பிள்ளைகளே, நீங்கள் பார்த்து மகிழ்ச்சியடையக் கூடிய இனிய காட்சியைக் கொண்ட மிதிலையென்னும் நகரமொன்றுண்டு. அதனை ஜனக மகாராஜன் என்பவன் ஆண்டுவருகிறான். இவ்வளவு தூரம் வந்த நீங்கள் அந்தத் திரு நகரத்தைப் பார்க்காமல் செல்வதுநன்றன்று. வாருங்கள் போகலாம்" என்று கூறி முனிபுங்கவர் அவர்களை அழைத்துக்கொண்டு மிதிலையை நோக்கிச் சென்றார்.

வழியில் கிடந்த கல்லின்மேல் ஸ்ரீராமனுடைய பாததூளி பட்டது. பட்டமாத்திரத்தில் அது ஓர் அழகிய பெண்ணாயிற்று. அதைக் கண்டு இராம லக்ஷ்மணர்கள் அதிசயித்தனர். இராமன், "ஈதென்ன அற்புதம்?" என்று வினவினான். முனிவர், இம்மாதரசி கௌதமரென்னும் முனிவருடைய மனைவி. ஒழுக்கந்தவறி நடந்தபடியால் இவளுக்கு இந்தச் சாபம் நேரிட்டது. உன்னால் சாபம் நீங்கப்பெற்றனள். இனி முனிவரிடம் செல்வள்"

என்று கூறி அவர்களை மிதிலைக்கு அழைத்துச் சென்றார்.

விசுவாமித்திரரின் வரவையறிந்த ஜனகமகாராஜன் அவரை எதிர்கொண்டழைத்துப் போய்ச் செய்யவேண்டிய உபசாரங்களைக் குறைவறச் செய்து தக்க ஆசனத்திலே வீற்றிருக்கச் செய்தான். அவருடனிருக்கும் இளவரசர்களை யாவரென விசாரித்தான். விசுவாமித்திரர் ராமலக்ஷ்மணர்கள் இன்னாரென்பதையும் அவர்களுடைய வல்லமையையும் கூறி, "நீ இப்பொழுது வேண்டுமானாலும் இந்த ராமனுடைய புயவலிமையைக் காணலாம்" என்றார்.

ஜனகமகாராஜன் கேட்டுச் சந்தோஷமடைந்து தன்னிடமிருந்த பெரிய வில்லைக் காட்டி இதனை நாணேற்றி வளைப்பவனுக்கு என் புதல்வி சீதையை மணஞ் செய்து கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிறேன். ஆதலினால் இதனை வளைப்பவன் என் புதல்வியை அடைவான்" என்றான். விசுவாமித்திரர், ஸ்ரீராமனை இப்பொழுது தமது கடைக்கண்ணாலே பார்த்தார். ஸ்ரீராமன் உடனே எழுந்து அந்தவில்லை வெகுசுளுவில் எடுத்து நிறுத்தி வளைத்து நாணேற்றினான். ஜனகன் ஸ்ரீராமனுடைய வீரபராக்கிரமம் கண்டு மகிழ்ந்து தன் புதல்வி சீதாதேவியை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். தன்னுடைய தம்பி புதல்வி ஊர்மிளை யென்னும் உத்தமியை இலக்ஷ்மணனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். பரதசத்ருக்நர்களாகிய ஸ்ரீராம



னுடைய தம்பிமார்களுக்கும் இங்கேயே விவாகம் நடந்தது. யாவரும் தம் தம் மனைவிமாருடன் அயோத்தி சென்றனர். விசுவாமித்திரரும் தம்பதிகளை ஆசீர்வதித்துத் தமதாசிரமம் போய்ச் சேர்ந்தார்.

பிள்ளைகளே, பெரியோரைத் துணைக்கொண்ட ஸ்ரீராமனுக்கு வந்த பெருமையைக் கண்டீர்களா? பெரியோர்கள் தம்மை அடுத்தவர்கட்கு எப்போதும் நன்மையே செய்வார்கள். ஆகையினால் பெரியோரிடம் அலட்சிய புத்தி பாராட்டலாகாது. அவர்களைக் கண்டால் வணங்கி மரியாதை செய்தல் வேண்டும். அவர்கள் போதிப்பதையும் மறவாமல் போற்றவேண்டும். அவர்கள் விரும்புகிறவைகளையே செய்தல் வேண்டும். இவ்வாறு கடைப்பிடித்தொழுக முயன்றால் பெறுதற்கரிய பேறுகளை யடையலாம்.

---

## உணவு முறை

(கே. எஸ். மணியனின்)

(மொழி பெயர்ப்பு.)

---

அடியில் குறித்த விதிகள் தேகாரோக்கியத்திற்கு மிகவும் இன்றியமையாதவை யென்று "ஹெல்த் ரெவியூ" பத்திரிகையில் ஒரு வைத்திய நிபுணர் எழுதி யிருக்கிறார்:—

1. இன்னும் கொஞ்சம் சாப்பிடமுடியும் என்ற நிலைமையிலிருக்கும் பொழுது நாம் சாப்பாட்டிலிருந்து எழுந்து விடவேண்டும்.

3. சாப்பிட வேண்டுமே யென்பதை ஒருவரும் கடமை யெனக்கொண்டு தமது ஆகாரத்தைச் சாப்பிடவே கூடாது. மற்றவர்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்பதற்காகவும் சாப்பிடக் கூடாது.

3. நல்ல பசி ஏற்பட்டாலன்றி ஒருவரும் ஆகாரத்தை உட்கொள்ளவே கூடாது. சாப்பிடுங் காலம் வந்து உங்களுக்குப் பசியில்லாம லிருந்தால் நீங்கள் ஆகாரத்தை உட்கொள்ளவே கூடாது. சாப்பிட வேண்டு மென்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படாம லிருந்தாலும் நீங்கள் உணவை உட்கொள்ளக் கூடாது. எந்த வியாதியினாலாவது, வருத்தத்தினாலாவது, கோபத்தினாலாவது, களைப்பினாலாவது உங்களுக்குச் சாப்பிடுவதற்கு விருப்பமில்லாமலிருந்தால் நீங்கள் சாப்பிடவே கூடாது. அடுத்த சாப்பாட்டுச் சமயம் வரையில் நல்லபசி உங்களுக்கு ஏற்படுகின்றதா என்று பொறுத்துப் பாருங்கள். இம் மாதிரியே உணவை அருந்தும் சமயங்களில் உங்களுக்கு ஆகாரத்தை உட்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இராவிடில் அது உங்களுக்கு நன்மை பயக்கக் கூடியதுதான். சரியான பசியின்றி ஆகாரத்தை உட்கொள்ளுவதே தேகாரோக்கியத்தைக் கெடுக்கக் கூடியதாக இருக்கின்றது. அப்படிச் சாப்பிடுவதனாலேயே தேகத்



தில் பலவித வியாதிகள் ஏற்படுகின்றன. தேகாரோக்கியம் கெட்டுப் போய் விடுகின்றது. எனவே நல்ல பசியில்லாத சமயத்தில் நீங்கள் ஆகாரத்தைச் சாப்பிடுவதை அறவே ஒழித்து விடுங்கள்.

4. மன வருத்தத்துடனாவது மனக் கஷ்டத்துடனாவது ஆகாரத்தைச் சாப்பிடவே கூடாது. அப்படிச் சாப்பிடுவதனால் பல தீங்குகள் நமக்கு ஏற்படும். அத்தகைய சமயங்களில் சாப்பிடாமல் சந்தோஷமும் நல்ல பசியும் உங்களுக்கு ஏற்படுகின்ற சமயத்தில் ஆகாரத்தை உட்கொள்ளுங்கள். அதுவே தேகாரோக்கியத்திற்குச் சிறந்த வழி. அதிகமான ஆகாரம் வேண்டு மென்று உங்களுக்கு இயற்கையாகவே தோன்றும்.

5. நீங்கள் சம்பாதிக்கின்ற பொருளுக்குத் தகுந்தாற்போல உங்களது ஆகாரத்தை நீங்கள் ஒவ்வொரு நாளும்மாற்றிவரவேண்டும். ஒரேமாதிரியான உணவை எப்பொழுதும் உட்கொள்ளவேகூடாது. உட்கொள்ளுகின்றசாப்பாட்டின் அளவும் எப்பொழுதும் ஒரேமாதிரியாக இருக்கவேண்டும். ஒருநாளைக்கு அதிகமாகவும், ஒரு நாளைக்குக்குறைவாகவும், உட்கொள்ளக்கூடாது. அதனால் பல தீமைகள் ஏற்படக்கூடும். நீங்கள் சோம்பலுடன் இருந்து சாப்பிடுவதைக் காட்டிலும் வருந்தி உழைத்து ஆகாரத்தை உட்கொண்டால் நல்லது. நீங்கள் வீண்காலம் கழிக்குமநாளைவிடக் கஷ்டப்பட்டு

வேலைசெய்யும் நாட்களில் அதிகமான உணவை உட்கொள்வீர்கள்.

6. நீங்கள் எப்பொழுதாவது சாப்பிடும்பொழுது அதிகமாகச் சாப்பிட்டுவிட்டதாக உங்களுக்குத் தோன்றினால் அடுத்தாற்போல் சாப்பிடும் சாப்பாட்டை அடியோடு நிறுத்தி விடுங்கள். அல்லது சாப்பிடுகின்ற உணவை அச்சமயத்தில் மிகவும் குறைவாகவே சாப்பிடுங்கள்.

7 இயற்கை ஆகாரங்களாகிய பழங்களையும், காய் கறிகளையும், நீங்கள் ஒவ்வொரு நாளும் சாப்பிட்டு வருவது தேகாரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. பச்சைக் கறிகாய்களையும், நல்ல பழங்களையும் நீங்கள் ஒவ்வொரு நாளும் சாப்பிட்டு வரவேண்டும்.

8. காலந் தவறிக் காலத்தில் சாப்பாட்டை உட்கொள்ளலாகாது. அவ் விஷயத்தில் தேகாரோக்கியத்தைக் கருதுகின்றவர்கள் மிகுந்த ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும்.

9. சாப்பிட்டவுடன் இடுப்பில் கச்சைகளையாவது பெல்டுகளையாவது நீங்கள் அணிந்துகொள்ளவே கூடாது. சாப்பாட்டை நீங்கள் வேகமாகவும் அவசரமாகவும் சாப்பிடவே கூடாது. சாப்பிடும்பொழுது ஆகாரத்தை மெதுவாகச் சாப்பிடுதல் அவசியம். ஆகாரத்தை அப்படியே விழுங்கிவிடக் கூடாது. நன்றாக மென்று ருசி பார்த்தே சாப்பிட வேண்டும்.



10. பதினாறாவது நூற்றாண்டில் அடியிற்கண்ட பழமொழி வழங்கப்பட்டு வந்தது. "காலையில் ஆறு மணிக்கு எழுந்திருக்க வேண்டும். (பத்து மணிக்கு ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும். மாலையில் ஆறு மணிக்குச் 'சாப்பிடவேண்டும்) பிறகு இரவு பத்து மணிக்குப் படுக்கைக்குச் செல்ல வேண்டும். இப்படிச் செய்யும் ஒவ்வொரு மனிதரும் நூறு ஆண்டுகள் வரையில் வாழ்ந்திருக்கலாம்."

11. நல்ல காற்று வீசுகின்ற பிரதேசங்களிலாவது, குன்றுகளிலாவது நன்கு உலவி வர வேண்டும்.

---

## சந்திரசேகரன் அல்லது தந்தைசொல் மிக்க மந்திரமில்லை

முன்னொரு காலத்தில் சோழ நாட்டில் இராஜசேகரன் என்று ஒரு மன்னன் இருந்தான். அவனுக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவனாகிய குலசேகரன் தன் தந்தையைப் போலவே ராஜ்ய காரியங்களில் மிகவும் ஊக்கத்தைச் செலுத்தியவனாய்த் தன்னால் இயன்றமட்டும் தன் தந்தையின் ராஜ்ய நிர்வாகத்தில் உதவிசெய்து உழைத்து வந்தான். இளையவனாகிய சந்திரசேகரனோ வெளியில் ஒருவருடனும் சேராமலும் ராஜகுமாரர்களுக்கு உரிய யானை யேற்றம், குதிரை யேற்றம், வில்

வித்தை முதலியவைகளில் தன்மனதைச் செலுத்தாமலும் இருந்தான். தன்னந் தனியாய் வெளியில் உலாவுவதில் அதிக பிரியங் கொண்டிருந்தான். சந்திரசேகரனுடைய நடத்தையைக்கண்ட அரசன் அதிக துக்க மடைந்து ஒரு நாள் அவனைத் தனியாய்க் கூப்பிட்டு "சந்திரசேகரா, நீயேன் உன் கௌரவத்திற்கு தகுந்தபடி உன் தமையனுடன் சேர்ந்து கல்வியிலும் விளையாட்டிலும் இராஜ்ய காரியங்களிலும் உன் புத்தியைச் செலுத்துவதில்லை? இப்படியிருந்தால் பிற்காலத்தில் எந்தத்தொழிலில் ஜீவனம் செய்து சீர்த்தியடைவதாய் உனக்கு எண்ணம்?" என்று கேட்டான்.

அதற்குச் சந்திரசேகரன் "என்பிரியமுள்ள தந்தையே, எனக்கு இவைகளிலெல்லாம் விருப்பமில்லை. எனக்கு எதிராக எண்ணில்லாத ஜீவராசிகள் வியாதிகளால் கஷ்டப்படுவதைப் பார்க்க என்னால் ஸகிக்க முடியவில்லை. அவைகளெல்லாம் கஷ்டப்படாமலிருக்கும்படி அவைகளுக்கு உபகாரம் செய்யப் பெரிய வைத்தியனாக ஆகவேண்டுமென்று எனக்கு மிக ஆசையாயிருக்கிறது." என்றான்.

"ராஜகுமாரர்கள் வைத்தியம் செய்ததை நீ பார்த்தும் கேட்டுமிருக்கிறாயா?" என்றான் அரசன்.

"வைத்தியத் தொழில்செய்து சம்பாதிக்காவிட்டாலும் வைத்தியம் கற்றுக்கொண்டு பக்தவனாய் விளங்குவதில் என்னபிழையிருக்கிறது" என்று விடையளித்தான் ராஜகுமாரன்.



"மிகவும் சரிதான். ஆனால் இந்த ஊரில் உனக்குச் சொல்லிக் கொடுக்கும்படியான தகுந்த வைத்தியர்கள் இருப்பதாய்க் காணவில்லையே! என்னசெய்யப் போகிறாய்?" என்றான் அரசன்.

ராஜகுமாரன் "மாறுவேடம் பூண்டு தேசாந்திரம் சென்று வர எனக்கு மிக ஆசை, அதற்குத் தடை சொல்லாமல் போய்வர விடை கொடுக்கவேண்டும்" என்றான்.

அரசனும் சற்று ஆலோசித்து "சரி, உன் இஷ்டப்படி செய், வித்தை கற்றுக்கொள்ள வெளிதேசம் செல்வது மிகவும் நல்லது. ஆனால் நீ செல்கிறவிடமெல்லாம் இதரர்களிடத்தில் மரியாதையுடனும் வணக்கத்துடனும் நடந்துகொள். உன்னைவிட அதிகம் தெரிந்தவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்களைப் பூஜித்து நட. ஒவ்வொருவரிடத்திலிருந்தும் உனக்குத்தெரியாத விஷயங்களைக் கற்றுக்கொள். உன்னைச் சுற்றிலும் நடக்கும் விஷயங்களில் உன்கவனத்தை நன்றாய்ச்செலுத்தி உன் புத்தியை நன்றாய் உபயோகித்துப் பிழை. இதுதான் நான் உனக்குச் சொல்லும் புத்தி" என்று அரசன் விடையளித்தான்.

அப்பால் சந்திரசேகரன், ஒருநாள் ஊரைவிட்டுப் புறப்பட்டு வெகுதூரம் நடந்து கடைசியாக ஒரு பிராமணன் கிருஹத்தையடைந்தான். அந்தப் பிராமணன் அவனைப்பிரியத்துடன் வரவேற்று அவனை உப

சரித்து "நீயார், எந்த ஊர், எங்கே செல்கிறாய்?" என்று வினவினான்.

சந்திரசேகரன்:—"நான் அதிக படிப்பாளியாக வேண்டுமென்கிற எண்ணத்துடன் செல்கிறேன்" என்றான்.

பிராமணன்:—"மிகவும் நல்லது; என்னுடன் கொஞ்சகாலம் தங்கி எனக்குச் சிஷ்யனாயிரு. எனக்குத் தெரிந்ததைச் சொல்லித்தருகிறேன். பிறகு செல்லலாம்" என்று சொன்னான்.

அதற்கிணங்கிச் சந்திரசேகரன் அந்தப் பிராமணனுடன் ஒருவருஷம் தங்கி அவனிடத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டியவைகளெல்லாம் கற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். அப்போது பிராமணன் சந்தோஷத்துடன் விடையளித்து "அதோ தெரியும் மலையில் ஒரு காட்டு ஜாதியார் வசிக்கிறார்கள். அவர்கள் தப்பு அறிவதில் மிகவும் நிபுணர்கள். அவர்கள் தலைவனுக்கு நான் ஒரு லிகிதம் தருகிறேன். அதைக்கொண்டு செல். அவர்களுக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் நன்கு கற்றுக்கொள். பிறகு அங்கிருந்து முப்பது மைல் தூரத்தில் என் தமையன் வசிக்கிறார். அவர் பெயர்பெற்ற இரண வைத்தியர். கபாலத்தைத் திறந்து மூளை வியாதிகளை ஸ்வஸ்தம் செய்வதில் மிகவும் சமர்த்தர். அவருக்குத் தெரிந்தவை யெல்லாம் கற்று அவரிடம் "பச்சைவைரம்"



எங்கேகிடைக்குமென்று கேள். அது விளக்கு மாதிரி பிரகாசிக்கும். அதன் உதவியால் ஒரு மனிதன் எந்த வியாதியால் அவஸ்தைப் படுகிறான் என்று சுலபமாய் அறியலாம். அவர்சொல்லுகிற பிரகாரம் அதனை அடைய முயற்சிசெய். சௌக்கியமாய்ப் போய்வா. நீண்டகாலம் கீர்த்தியுடன் ஜீவிப்பாயாக" என்று ஆசீர்வதித்துச் சந்திரசேகரனை அனுப்பினான். சந்திரசேகரன் அவ்வாறே சென்று அக்காட்டு ஜாதியுடன் வசித்தான். அவர்கள் அவனிடத்தில் அதிகப் பிரீதியையடைந்து, காட்டு மிருகங்கள் வழி நடையைக் கண்டுபிடிக்கும் வழியையும், காடாயிருந்தாலும் சரி, கட்டாந்தரையாயிருந்தாலும் சரி, மணலாயிருந்தாலும் சரி, மேடாயிருந்தாலும் சரி, எந்தத்தரையிலும் எந்த ஜீவராசிசென்றிருந்தாலும் அதுசென்ற வழியையும், அதிலிருந்து அந்த ஜீவராசியின் குணம் அம்சம் முதலியவைகளை ஊகிக்கும் வழியையும் அவனுக்கு நன்கு கற்றுக்கொடுத்தனர். பின் அங்கிருந்து முப்பது மைல் தூரத்தில் வசித்த வைத்திய சிகாமணியையடைந்து அவரிடத்தில் இரணவைத்தியத்தையும், மற்றும் அநேக அரிய விஷயங்களையும் கற்றுக்கொண்டு அவருடன் ஒரு வருஷம் தங்கியிருந்து அப்பால் பச்சைவைரத்தைத்தேடி யடைய வழிகேட்டான். அவர் "அது ஒருமரத்தில் அடங்கியிருக்கிறது. அம்மரத்தின் பட்டையிலிருந்து எப்பொழுதும் ஒருவிதமான சிவப்பு பொடி கொட்டிக்கொண்டே யிருக்கும். அம்மரத்தின்

கட்டை இரும்பு மாதிரி கனமாயும் அழுத்தமாயுமிருக்கும்" என்று சொல்லி யனுப்பினார். சந்திரசேகரன் அப்பால் ஒரு கிழ பிராம்மணத் தபஸியின் ஆச்ரமத்தையடைந்தான். இம்மஹான் தன் க்ருஹத்திற்கு எதிரில் வியாக்ராஸனத்திலமர்ந்து யோகாப்யாஸம் செய்து கொண்டிருந்தார். சந்திரசேகரனும் பெரியவரருகில் மரியாதையாய் அமர்ந்து அவர் நிஷ்டை முடிந்த பிறகு தான் இன்னார் என்று மாத்திரம் சொல்லாமல் மற்ற தன் வர்த்தமானங்களை எல்லாம் அவரிடத்தில் சொன்னான். அதைக்கேட்டு அவ்வயோதிகர் திருப்தியடைந்து "அப்பா, குழந்தாய், நீ சொல்வது மிகவும் ஆச்சரியமே. நான் இப்பொழுது உன்னைப் பரீக்ஷை செய்து பார்க்கப்போகிறேன். திருப்தியாயிருந்தால் உனக்குச் சில மந்திரங்களை உபதேசிக்கிறேன். இன்று காலையில் எந்த ஜீவராசியாவது இவ்வழியாய்ச் சென்றது சொல் பார்ப்போம்" என்றார்.

"சரி, இதோ சற்றுநேரத்தில் சொல்லுகிறேன்" என்று சிரித்த முகத்துடன் விடைபெற்று அங்கு இருக்கும் ஆச்ரமத்தின் முன்பாகத்திலுள்ள பாதையை உற்றுநோக்கி நடந்து மறுபடியும் பெரியவரிடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு "இன்றுகாலையில் ஒருமனிதன் விறகுகட்டைகளைத் தூக்கிக்கொண்டு இவ்வழியாய் நடந்தான். அவனால் பாரத்தைத் தாங்க முடியவில்லை. அவன் பலஹீனன்; ஒருவேளை நாடி தேஹமுள்ளவன்." என்றான்.



"நீ சொல்வது வாஸ்தவம்" என்றார் பெரியவர். "பிறகு ஒரு பெண்யானை இவ்வழியாய்ச் சென்றது. அதை ஒரு ஸ்திரீ நடத்திக்கொண்டு சென்றாள். அந்த யானை இடது கால் தாங்கி நடந்தது. அதன் வலது கண் பொட்டை". என்றான் ராஜகுமாரன். "வாஸ்தவம்" என்றார் வயோதிகர்.

"ஒரு ஜாம நேரம் சென்றது. பிறகு ஒரு மனிதன் ஓர் இரட்டை மாட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான். அவன் எங்கேயோ அவசரமாய்ப் போக வேண்டியிருந்ததால் மாடுகளை அடித்து ஓட்டினான். பக்கத்தில் அவனுடைய நாய் வண்டியைச் சுற்றிச் சுற்றி ஓடிக் குலைத்துக்கொண்டு சென்றது." என்றான் ராஜகுமாரன். "இதென்ன ஆச்சரியம்! என் அருகில் நீ உட்கார்ந்து பார்த்தது போல் சொல்கிறாயே" என்றார் தபஸ்வி.

"பிறகு ஒருதிருடன் அக்காட்டிலிருந்து திருட்டுத்தனமாய் வெளிக்கிளம்பினான். உங்களைப் பார்த்தவுடன் இரண்டு நிமிஷம் அசையாமல் நின்றான். ஆனால் நீங்கள் கண் மூடி மௌனியாயிருந்ததால் நீங்கள் அவனைப் பார்க்கவில்லை, அவன் இவ்வழியாக ஓடினான். ஆனால் அவனுக்குக் காயம்பட்டிருந்ததால் வெகுதூரம் சென்றிருக்கமாட்டான்" என்றான்.

"ஆம், திருடனைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது" என்றார் பெரியவர்.

அதற்குள் காட்டிலிருந்து மூன்று சிப்பாய்கள் வெளியில் பாய்ந்தார்கள். சந்திரசேகரன் அவர்களை உற்று நோக்கிப் பெரியவரைப் பார்த்து "அத்திருடன் நேற்றிரவு அரண்மனையில் நுழைந்தான். இதோ இவர்கள் மூவரும் அரண்மனைக் காவலாளிகள். இவர்கள் இத்திருடனை பின் தொடர்ந்தார்கள். அவனை இக்காட்டில் கண்டதும் இவர்களில் ஒருவன் பாணப்பிரயோகஞ்செய்து அத்திருடனைக் காயப்படுத்தினான். ஆனால் அத்திருடன் எப்படியோ இவர்களை ஏமாற்றி ஒளிந்து தன் காயத்தைக் கட்டிக்கொண்டு நகர்ந்துவிட்டான்" என்றான். அச்சிப்பாய்கள் இவர்கள் அருகில்வந்து "இவ்வழியாய் யாராவது மனிதன் சென்றானா?" என்று வினவினார்கள்.

அப்பெரியவர் தலையை யசைத்தார். ஆனால் சந்திரசேகரன் "அவன் ஒரு ஜாமத்திற்குள் இவ்வழியாய்ச்சென்றான். நீங்கள் தேடுகிற திருடன் அவன் தான். ஒரு பாணத்தினால் காயம் பட்டிருக்கிறான். காட்டிலிருந்து அவன் தப்பும்படி நீங்கள் எப்படி பார்த்துக் கொண்டிருந்தீர்கள்" என்று கேட்டான்.

"அவனுடன் நீங்கள் பேசினீர்களா?" என்றான் ஒருசிப்பாய். "இல்லை அவனை நான் கண்ணால் கூட பார்க்கவில்லை" என்றான் ராஜகுமாரன்.

"அப்படியானால் நாங்கள் திருடனைத் தேடிக் கொண்டு வருகிறோமென்றும் அத்திருடனுக்குக்



காயம் பட்டதென்றும் உங்களுக்கு எப்படிதெரியும்" என்றான் சிப்பாய்.

"அதைப்பற்றி நான் பிறகு சொல்கிறேன். நீங்கள் இந்த வழியாய் வடக்கே சென்றால் அவனைக் கண்டு பிடிக்கலாம். அவன் வெகுதூரம் சென்றிருக்க மாட்டான்" என்றான் ராஜகுமாரன்.

சிப்பாய்கள், 'நீங்களும் எங்கள் கூடவே வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும்' என்றார்கள். சந்திரசேகரன் "சரி, அப்படியே ஆகட்டும்" என்று பெரியவரிடம் விடைகொண்டு பூமியைப் பார்த்துக்கொண்டே அச்சிப்பாய்கள் முன்னால் நடந்தான். அவர்கள் அவனை அநேககேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள். அதற்கவன் "உஸ், சப்தம் செய்யாதேயுங்கள். உங்கள் அரவத்தைக்கேட்டுத் திருடன் நழுவி விடுவான். அவனைப் பிடித்த பிறகு நான் எல்லாம் சொல்கிறேன்" என்றான். இம்மாதிரி நடந்துகொண்டே ஒரு பாழான மண்டபத்தை யடைந்தார்கள். அக்கட்டிடத்திற்குள் திருடன் இருப்பதாகச் சந்திரசேகரன் சைகைகாட்டவே, சிப்பாய்கள் மெதுவாய் உள்ளே நுழைந்து ஒரு மூலையில் அத்திருடன் அயர்ந்த நித்திரையி லிருப்பதைக்கண்டு அவனைப் பிடித்து நன்றாய்க் கட்டி வெளியில் கொண்டு வந்தார்கள்

"நேற்றிரவு நீ களவாடின வைர அட்டிகை எங்கே?" என்று ஒரு சிப்பாய் கேட்டான்.

திருடன் "வைர அட்டிகையா? நீங்கள் சொல்கிறது அர்த்தமாக வில்லையே! என்னை எதற்காகப் பிடித்துக் கட்டியிருக்கிறீர்கள்" என்றான். "அரண்மனையிலிருந்து நீ அந்நகையைக் களவாடவில்லையா" என்று கேட்டனர். திருடன் "ஓ, இல்லவேயில்லை. நீங்கள் திருடனை விட்டுவிட்டு என்னைத் துரத்தியிருக்கிறீர்கள். நான் சாதாரணமாய் அக்காட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். அப்பொழுது நீங்கள் வரும் சப்தத்தைக் கேட்டு நீங்கள் ஏதோ கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று பயந்து ஓடினேன். பிறகு என்னை ஏதோ காரணத்திற்காகக் கொல்ல வந்திருக்கிறீர்கள் என்றெண்ணி ஒளிந்து கொண்டேன்" என்றான். இம்மனிதன் சொல்வது நிஜம்போல் இருந்ததால் அச்சிப்பாய்கள் தயங்கினார்கள். சந்திரசேகரன் பேசவேயில்லை. புல்தரையில் உருட்டி விடப்பட்டிருக்கும் அம்மனிதன் பக்கத்தில் உட்கார்ந்து அவன் கால் கைகள் தேகமும் முதலியவைகளை உற்றுப்பார்த்து அவன் தொடையிலுள்ள காயக்கட்டை அவிழ்த்துத் தகுந்த மூலிகைகளை வைத்துச் சாமர்த்தியமாய்க் கட்டினான். அம்மனிதனுக்கு வலியெல்லாம் பறந்து போய், ராஜகுமாரனை வாழ்த்தி "ஓ வைத்தியரே இக்காயத்தால் எனக்கு இப்போது கொஞ்சம் கூட வலியில்லை" என்றான்.

"இம்மனிதனை உங்களுக்குத் தெரியுமா?" என்று ராஜகுமாரனை நோக்கி ஒரு சிப்பாய் கேட்டான்.



அதற்குச் சந்திரசேகரன் "நான் இதற்கு முன்னால் இம்மனிதனைப் பார்த்தது கிடையாது. இவனைப் பற்றி நான் இப்பொழுது தெரிந்து கொண்ட விஷயங்களைச் சொல்கிறேன் கேளுங்கள். இவன் குயவன். இவன் நேற்று இரவு அரண்மனைத் தோட்டத்தில் சுவரேறிக் குதித்து நுழைந்தான். அங்கு ஒரு பெரிய மகிழ மரத்தில் நடுநிசியாகும் வரையில் ஒளிந்து கொண்டிருந்தான். பிறகு மெதுவாய்க் கீழே இறங்கி வேலைக்காரர்கள் செல்லும் வழியாய் அரண்மனைக்குள் நுழைந்தான். இவனுக்கு ஏற்கனவே வழி நன்றாய்த் தெரியும். ஏனென்றால் இவனடிக்கடி வேலைக்காரர்களுக்குச் சட்டி முதலியவைகளைச் செய்து விற்றிருக்கிறான். இருட்டில் மெதுவாக நகை வைத்திருக்கும் அறையை நோக்கிச்சென்றான். அவ்வறை நிறைய மான் தோல்கள் பரப்பியிருந்தன. பிறகு நகையைக் களவாடின பின்பு ஜன்னல் வழியாய் வெளியில் வந்து தரையிலிருந்து சுவரில் ஜன்னல் சமீபமாய்ப் படர்ந்திருக்கும் ஒரு கொடியைப் பற்றிக்கொண்டு சர சர வென்று இறங்கலானான். இறங்கும் போது அக்கொடியறுந்து கீழே விழுந்தான். விழுந்ததும் சற்றுநேரம் மூர்ச்சித்துக் கிடந்தான். பிறகு அரண்மனையில் கலவரம் ஏற்பட்டதை யறிந்து தோட்டத்தின் வழியாய் ஓடி, சுவர் ஏறிக் குதித்துக் காட்டை நோக்கி ஓடினான். இதற்குள் சந்திரன் உதயமாய் நல்ல நிலா வெளிச்சமுண்டாயிற்று. நீங்கள் இவனைப்பார்த்துத் துரத்தத்

தொடங்கினார்கள். காட்டில் இவனை நோக்கி அநேக பாணங்கள் எய்தார்கள். அவைகளில் ஒன்று இவன் தொடையில் தாக்கிற்று. உடனே அவன் புதரில் ஒளிந்து கொண்டான். நீங்கள் அப்பாகத்தை விட்டு நீங்கின பிறகு இவன் எழுந்து தன் காயத்தைக் கட்டிக் கொண்டு சாலைப் பக்கம் வந்தான். அங்கு ஆச்ரமத்திற்கு எதிராக ஒரு பிராமணர் யோக நிஷ்டையில் அமர்ந்திருப்பதைக்கண்டு அவரைத் தாண்டி ஓடலானான். அப்படி ஓடும்பொழுது அவன் கட்டு அவிழத் தொடங்கிற்று. அதைத்திரும்பவும் நன்றாய்க் கட்டிக் கொண்டான். ஆனால் ஏற்கனவே காயத்தினால் அதிக ரத்தத்தை இழந்து விட்டபடியால் சிரமம் மேலிட்டுத் தான் இனிமேல் அதிக தூரம் செல்லமுடியாது என்று நினைத்தான். இந்தப் பாழ் மண்டபத்தைக் கண்டதும் இதில் ஒளிந்துகொள்ள நிச்சயித்தான். ஆனால் இதற்குள் நுழைவதற்குமுன் அந்நகையை ஒரு களி மண் மேட்டில் ஒளித்து வைத்தான்" என்றான்.

சந்திரசேகரன் சொல்வதைக்கேட்டு அத்திருடன் திகைத்துப் போய் பெருமூச்சு விட்டு "ஐயா, நீங்கள் பெரிய மந்திரவாதியா" என்றான். அதற்கு ராஜகுமாரன் கோபத்துடன் "அதிருக்கட்டும், நீ நகையை ஒளித்து வைத்திருக்கும் இடத்திற்கு அழைத்துப்போய் நகையை எடுத்துக் கொடுக்கிறாயா அல்லது அதையும் நான் கண்டு பிடித்துச் சொல்லட்டுமா" என்றான். அத்திருடன் நடுங்கிப்போனான்.



பிறகு அவனைப் பிணித்திருந்த கயிறுகளை அவிழ்க்கவே, அப்பாழ் மண்டபத்திற்குப் பின்னால் சென்று அங்கு இருக்கும் ஒரு பாராங்கல்லை நகர்த்தி அதன் கீழுள்ள மண்மேட்டை நோண்டி ஒரு களிமண் உண்டையை எடுத்து அதை விண்டு அதற்குள்ளிருந்து நகையை எடுத்துக்கொடுத்தான். பிறகு எல்லோரும் திரும்பி ஆச்ரமத்தையடைந்தார்கள். அந்தச்சிப்பாய்கள் இந்த ராஜகுமாரனை ஒரு பெரிய மஹானென்று நினைத்து அவனுக்கு நமஸ்காரம் செய்து அவனிடத்தில் உத்தரவு பெற்றுத் திருடனை அழைத்துக் கொண்டு அரண்மனை நோக்கிச் சென்றார்கள். நடந்த விஷயங்களை எல்லாம் அந்தப் பிராமணனுக்குச் சந்திரசேகரன் சொன்னான். "சரி, இன்று காலையில் இவ்வழியாய்ச்சென்ற ஜந்துக்களைபற்றி நீ எப்படிக் கண்டு பிடித்தாய் சொல்லப்பா" என்றார் பிராமணர்.

இவ்விஷயங்களை யெல்லாம் கண்டு பிடிக்கும் வழியை நான் அக்காட்டு ஜாதியாரிடம் அறிந்து கொண்டேன். நான் சொன்னவைகளை எல்லாம் காலியான இந்தச் சாலையிலிருந்து கண்டுபிடித்தேன். விறகுகளைத் தூக்கிச்சென்ற மனிதனுடைய கால் சுவடுகளைக் கண்டேன். அவைகள் மெல்லியதாய் இருந்ததால் மெல்லிய கால்களையுடையவ னென்றும் ஆகையால் அம்மனிதன் மெலிந்தவனென்றும் கண்டுகொண்டேன் அவன் கால் சுவடில் முன்காலை விடக் குதிகால் நன்றாய்ப் பட்டிருந்ததால் பலஹீனத்தால் நடந்தான்

என்று கண்டேன். காலடிகள் நேராகச் செல்லாமல் வளைந்து வளைந்து சென்றதால் பெரிய பாரத்தைத் தாங்கிக்கொண்டு அசைந்து கொண்டு சென்றதாகப் புலப்பட்டது. அவன் கடையின் பக்கத்தில் சிறுபத் தூள் பொடிகள் சிந்தியிருந்ததால் அவன் விறகு கடையன் என்று புலப்பட்டது." என்றான்.

"அம்மனிதனுக்குப் பிறகு யானை வந்ததை எப்படிக் கண்டாய்" என்று கேட்டார் பிராமணர்.

சந்திரசேகரன் "ஏனென்றால் அம்மனிதன் அடிச்சுவடுமேல் அநேக இடங்களில் யானையின் அடிச்சுவடுகள் பதிந்திருந்தன" அதனால் என்றான்.

"அது பெண் யானையென்று எப்படிக் கண்டாய்?"

"ஆண் யானையின் சுவடுகள் உருண்டையாயும், பெண் யானையின் சுவடுகள் கோணலாயுமிருக்கும். எல்லா பாதங்களையும் கெட்டியாய் அமர்த்தி நடக்கும் பொழுது இடது பின் பாதம் மாத்திரம் மெதுவாய் பூமியில் பட்டிருந்ததால் கால் தாங்கிற்று என்று கண்டேன். அந்த யானை சென்றபொழுது அது இடது பாரிசத்திலுள்ள செடிகளை மாத்திரம் பிடுங்கித் தின்றது. அந்த மாது அந்த யானையை வலது பக்கத்தில் கொண்டு போன பொழுது அது சும்மா சென்றதால் அதன் வலது கண் பொட்டையென்று அறிந்தேன்" என்றான்.

"அதை ஒரு மாது நடத்தினாள் என்று எப்படிச் சொன்னாய்?"



"மனிதன் காலடிக்கும் ஸ்திரீயின் காலடிக்கும் வித்யாஸம் உண்டு."

"யானைக்குப் பிறகு இரட்டை மாட்டு வண்டி வந்தது எப்படித் தெரிந்தது?"

"ஏனென்றால் வண்டி சென்ற அடையாளம் சிலவிடங்களில் யானையின் சுவடுமேல் சென்றது."

"வண்டிக்காரன் அவசரமாய் மாடுகளை அடித்து விரட்டினான் என்று எப்படிக் கண்டாய்?"

"மாடுகளின் காலடிகளிலிருந்து தெரிந்துகொண்டேன். சாதாரணமாய் ஒரேமாதிரியாய்ச்சென்ற அடிகள் சிலவிடங்களில் துரிதமாயும் அடி பொறுக்கமாட்டாமல் உடம்புவளைந்து அதனால் காலடிகள் நன்றாய்ப் பதிந்துமிருந்தன. மேலும் ஆளின் காலடிகள் மாடுகளின் அடிகளை சுற்றிச் சுற்றியும் சிலவிடங்களில் நின்றும் தோன்றின. ஆகையால் மாடுகளை அடித்து ஓட்டியும் காலால் விட்டுக் குரைத்துச் சொல்லியும் ஓட்டியதால் அவ்வண்டிக்காரன் அவசரப்பட்டானென்று ஊகித்தேன்."

"நீ சொன்ன பிறகு எல்லாம் ஸுலபமாய்த் தோன்றுகின்றன. அத்திருடனைப் பற்றி எப்படி அறிந்தாய்?"

"சொல்கிறேன் கேளுங்கள். முதலில் அக்காட்டிலிருந்து அவன் காலடிகள் சாலைமார்க்கமாய் வந்தன. பிறகு வண்டியடையாளத்தின் மேல் அவன் உள்ளங்

காலால் நடந்தான். உங்களைக்கண்டுவிட்டதால் அவன் மூன்று தரம் தயங்கி நின்றான். பிறகு அவன் உங்களைத் தாண்டி வேகமாய் ஓடினான். அவன் நின்ற இடமெல்லாம் கால்கள் நன்றாய்ப் பதிந்து அமைந்திருந்தன. அவன் ஓடின இடங்களில் முன்பாதத்தின் அடிகள் தான் தென்பட்டதே யொழிய குதிகாலடிகளைக் காணவில்லை. ஆகையால் ஏதோ தப்புச் செய்தவன் பதுங்கிச் சப்தம் செய்யாதிருக்க அப்படி யோடியிருக்கவேண்டுமென்று அறிந்தேன். அவன் அப்படி ஓடியதினால் தாங்கள் அவனைப் பார்க்கவில்லை யென்றும் நீங்கள் நிஷ்டையில் அமர்ந்திருந்தீர்கள் என்றும் எண்ணினேன்." என்றான்.

"ஆச்சரியமே! அவனைப் பாழ்மண்டபத்தில் கண்டு பிடித்த பிறகு நேற்று இரவு அவன் அரண்மனையில் செய்த விஷயங்களை யெல்லாம் எப்படிக் கண்டு பிடித்தாய்?"

"நான் வெகு கூர்மையாக அவன் மயிர், சரீரம், கைகள், நகங்கள், கால்கள், விரல்கள், விரல்நகங்கள், இவைகளைக் கண்டேன். அவன் காயத்தையும் அதன் மேல் கட்டியிருந்த கட்டையும் கூடக் கவனித்தேன்"

"அவைகளால் நீ என்ன அறிந்தாய்?"

"அவனது வலது கையின் உள்பாகம் மிருதுவாயும் இடது கையின் உள்பாகம் மிகவும் கரடுமுரடாயுமிருந்ததால் அவனுடைய தொழில் குயத்தொழில் என்று அறிந்தேன். குயவர்கள் பானைசெய்யும் சுழல்



சக்கரத்தை இடதுகையால் சுழற்றுவார்களாதலால் சக்கரத்தில் பட்டுப் பட்டுக் கை கடினமாய்ப்போகும். அவனது தலைமயிரில் மகிழ விதைகள் உதிர்ந்து கிடந்தன. அரண்மனையின் சிங்காரத் தோட்டத்தைத் தவிர வேறு எங்கும் இப்புஷ்பமரம் இருக்காது என்றும், மரத்தின் கிளைகளில் அவன் தன் தலையை ஒட்டிவைத்துப் பதுங்கியிராவிட்டால் விதைகள் மயிரில் உதிர்ந்து அமராது என்றும் அரண்மனை வாயிலில் எப்போதும் காவலாளிகள் இருப்பதால் சுவரேறிக் குதித்து மரத்தினடியில் சென்று அதன்மீது ஏறிப் பதுங்கினான் என்றும் அறிந்தேன். அவன் கால்விரல் நகங்களில் செம்மண் பட்டிருந்தது.

அரண்மனை வேலைக்காரர்கள் வீட்டுப் பக்கமெல்லாம் செம்மண் இட்டுச் சுத்தப்படுத்தியிருக்குமாதலால் இவன் வேலைக்காரர்கள் நிலயத்தின் வழியாய் அடிக்கடி வருபவன் என்றும் அநேகமாய் அவர்களுக்குச் சட்டி, பானை முதலியவைகளை விற்றுவருபவன் என்றும் அறிந்தேன். அரண்மனைக்குள் நுழைந்ததும் இக்குயவனுக்கு அதிகதிகிலுண்டாயிற்று. ஜனங்களுக்கு திகில் மேலிட்டால் அவர்கள் தேகமெல்லாம் அதிக வியர்வைவிடும். இவன் தேகத்தில் நிறைய மான் மயிர்கள் ஒட்டிக்கொண்டிருந்ததால் இவன் திகிலினால் வியர்வைவிட்டு அவ்வியர்வையுடன் மான் தோல்களில் படுத்து ஒளிந்திருக்கவேண்டும் என்று அறிந்தேன். அவன் வெகுநேரம் அப்படியிருந்திருக்கவேண்

டும். ஏனென்றால் அவன் துணிகளில் கூட இம்மயிர்கள் ஒட்டியிருந்தன. பிறகு காட்டில் வேஷ்டியைக் கிழித்துக் காயத்தைக் கட்டியபொழுதும் அக்கட்டில் கூட இம்மான் மயிர்கள் இருந்தன. இவன் கைகளில் பச்சைச் சாறுபட்டு உலர்ந்துபோன அடையாளமும் வாஸனையும் இருந்தன. இடது கையில் இரண்டு விரலிலும் வலதுகையில் ஒரு விரலிலும் கயிற்றைப்பாட்டு அறுத்தது மாதிரி காயம் இருந்தது. இதனால் அவன் ஒரு படர்ந்த செடியின் கொடியைப் பிடித்துச் சரசர வென்று இறங்கியிருக்கவேண்டுமென்றும் அக்கொடி கையில் காயத்தையும், அக்கொடியின் இலைகள் கையால் நசுக்கப்பட்டு அதின் ரஸம் கையில்பட்டு உலர்ந்திருக்கவேண்டுமென்றும், படர்ந்தகொடிகளை எப்பொழுதும் ஜன்னல் பக்கம் வளர விடுவதால் ஜன்னல் வழியாய் வெளியேறினானென்றும், அறிந்தேன். அவ்வளவு மெல்லியகொடியால் இறங்கினால் கொடியறுந்து கீழே விழுந்திருப்பான் என்று எண்ணி அவன் தேகத்தைப்பார்த்ததில் அவன் இடது துடையிலும், இடது கையிலும் இடது காது பக்கத்திலும் சிராய்த்த காயத்தைக் கண்டேன். காதுபக்கத்தில் தலைமயிரில் ஈரமண் ஒட்டியிருந்தது. இவன் பனிபெய்த தரையில் விழுந்து கிடந்தான் என்றும் சற்றுநேரம் ஸ்மரணை தப்பி இருந்திருக்கவேண்டுமென்றும் அறிந்தேன். அவன் கால் விரல்கள் இரண்டு முன்பக்கமாய் வளைந்து இருந்தன. இதனால் கலவரம்கேட்டு வேகமாய்ச்சுவரேறித்தாண்டு



கையில் அவனது விரல்களில் அடிபட்டிருக்க வேண்டுமென்று ஊகித்தேன்" என்றான்.

"இவன் சுவர் ஏறிக்குதித்துக் காட்டைநோக்கிச் செல்லும் பொழுது நிலா வடித்தது என்று எப்படிச் சொன்னாய்?"

"இவன் இரண்டு தரம் சுவரேறிக் குதித்ததை ஒருவரும் பார்க்காததால் இருட்டில் இக்காரியங்கள் நடந்தனவென்றும் பிறகு இவன் கண்ணுக்குத் தென்பட்டுப் பாணம் எய்யப் பட்டத்திலிருந்து நிலா வெளிச்சம் உண்டாயிற்றென்றும், அறிந்தேன். ஜனங்கள் கண்தெரியாத இருட்டில் பாணத்தை எய்யமாட்டார்கள். இம்மனிதனோ பாணத்தால் காயப்படுத்தப்பட்டிருக்கிறான். ஆகையால் சந்திர வெளிச்சம் கிளம்பியிருக்க வேண்டுமென்று அறிந்தேன்." "சரி, திருடன் திருட்டை ஒப்புக்கொண்டது ஆச்சரியமல்ல. உன்னை ஒரு பெரிய மந்திரவாதி யென்றே அவன் எண்ணிப் பயந்திருக்கவேண்டும். ஆனால் அவன் நகையைக் களிமண்மேட்டில் ஒளித்துவைத்ததை எப்படிக் கண்டாய்?"

"இன்று காலையில் நான் இப்பாழ் மண்டபத்தின் வழியாக வந்த பொழுது இம்மண்டபத்தின் பின் பக்கத்தில் களிமண் அதிகமாய் இருந்ததையும் ஒருவற்றிப் போன குட்டையையும் கண்டேன். இங்கு குயவர்கள் ஏற்கனவே குடியிருந்து ஜீவனம்செய்து வந்தவர்கள் குட்டையில் ஜலம் வற்றி விட்டபடியால் வேறு

இடம்மாறி விட்டார்கள் என்று அறிந்தேன். இம்மனிதன் குயவர் ஜாதியைச் சேர்ந்தவனாதலால் ஒருவேளை இங்கு வசித்து வந்த குடும்பங்களைச் சேர்ந்தவனாயிருக்கவேண்டு மென்றும் அறிந்தேன். ஏனென்றால் ஒருவன் தனக்கு ஆபத்து நேரிட்ட சமயத்தில்தான் அதிகமாகப் பழக்கப்பட்டுள்ள பிரதேசமாகத்தான் ஓடுவது வழக்கம். மேலும் குயப்புத்தி களிமண்ணையும் சேற்றையும் நோக்குமே யொழிய வேறொன்றையும் நோக்காது" என்றான்.

"சரி, என் கூடக் கொஞ்சகாலம் இரு. இவ்வளவு புத்திகூர்மையுடையவனை நான் வெகுநாளாய்க் கண்டதில்லை" என்று அம்முனிவர் இராஜகுமாரனை நன்றாய்ப் புகழ்ந்தார்.

"அப்படியே ஆகட்டும். ஆனால் அருகில் எதாவது சாவடியிருந்தால் அவ்விடம் நான் அவசரமாகச் செல்லவேண்டும். இன்று காலையில் இவ்விடம் வந்த விறகு தலையனைக் காணவேண்டியிருக்கிறது" என்றான் சந்திரசேகரன்.

அவனிடத்தில் என்னவேலை உனக்கு?"

"அந்த விறகு சுமையை நான் வாங்கிக் கொள்ளப் போகிறேன்"

"ஏன்?"

"என்கூட வாருங்கள் தானாகத் தெரியவரும்" என்று சொல்லி அப்பிராமணரையும் அழைத்துக்கொண்டு சந்திரசேகரன் வழிநடையைப் பார்த்துக்



கொண்டே ஒருநாழிகை வழிக்கப்பாலுள்ள சாவடியை அடைந்தான். அவ்விடத்தில் அவ்விறகு தலையன் களைத்துப்போய் விறகு கட்டுடன் பசிமேலிட்டவனாய் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனருகில் சென்று அவனை எழுப்பி "இந்த விறகை விற்கிறாயா?" என்றான் ராஜகுமாரன்.

"ஆம்" என்றதின் பேரில் அவன் சொன்ன விலையைப் பேரம்பேசாமல் கொடுத்து சந்திரசேகரன் அதைவாங்கினான். பிறகு அவ்விறகு கட்டைத் தன் தலையில் தூக்கிக்கொண்டு அவ்வயோதிகருடன் அவர் ஆச்ரமத்தையடைந்து கட்டைக் கீழேயிறக்கி அவ்விறகு துண்டுகளையெல்லாம் நன்றாய் உற்றுப்பார்த்து அவைகளில் ஒன்றைப் பொறுக்கி அதைப்பிளக்கவே அதற்குள்ளிருந்து ஒரு பச்சைவைரம் கீழே விழுந்தது. "கடைசியாக நான் இதையடைந்தேன். இதற்காக நான் வெகுநாளாய்த் தேடிக்கொண்டிருந்தேன். இவ்விறகு தலையன் விறகு தூக்கிச் செல்லும்பொழுது அதிலிருந்து உதிர்ந்த பொடியினால் நான் தேடிக்கொண்டு செல்லும் பாதையை இவன் வெட்டிவிட்டான் என்று நான் அப்பொழுதே ஊகித்தது சரியாய்ப் போய்விட்டது" என்றான் ராஜகுமாரன்.

"இது என்னவைரம்?" என்றார் பெரியவர்.

"இதை ஒரு வியாதிக்காரன் அருகில் வைத்தால் விளக்குமாதிரி பிரகாசிப்பதோடு அந்த

மனிதன் என்ன வியாதியால் அவஸ்தைப் படுகிறான் என்றும் விளக்கிக் காட்டும்" என்றான்.

"அதைப் பரீக்ஷைசெய்துபார்க்க எனக்கு ஆவல்" என்று பெரியவர் சொன்னார்.

அன்று சாயந்திரம் அவ்வழியாக ஒரு பிச்சைக் காரன் தலையிலடித்துக்கொண்டு அழுது கொண்டே வந்தான்.

"அப்பா, அப்படி எதற்காகச்செய்கிறாய்? உனக்கு உடம்பு என்ன?" என்றார் பெரியவர்.

"ஐயோ! யஜமானே, என் தலையில் யாரோ கத்தியால் குத்துகிற மாதிரி ஒரே குடைச்சலா யிருக்கிறது" என்று அழுதான்.

அதைக்கேட்ட சந்திரசேகரன் அவனை உட்கார வைத்து அவன் தலையில் அப்பச்சை வைரத்தை வைத்துப்பார்த்து "ஒரு பூரான் உன் காது வழியாய் உள்ளே நுழைந்து உன் மூளையை நோக்கித் துளைத்துச் சென்று கொண்டிருக்கிறது" என்றான்.

"ஐயோ! எனக்கு வைத்தியம் செய்யுங்களேன்" என்று பதறினான் அப்பிச்சைக்காரன்.

அதன்படியே அம்மனிதனை விட்டு ஒருபெரியபள்ளம் தோண்டி அதில் அம்மனிதனை இறங்கச்சொல்லிக்கழுத்துவரையிலும் மண்ணைப்போட்டு, அவன் அசையாவண்ணம் மூடிவிட்டு, சந்திரசேகரன், தன் னுடைய முன்ருவது குரு கொடுத்த ஆயுதங்களால் சாமர்த்



தியமாய் அவன் மண்டை யோட்டைத்திறந்து ஒரு கூர்மையான ஆயுதத்தால் அப்பூச்சியை வெளியில் எடுத்து மண்டையை மறுபடியும் மூடி, தகுந்த பச்சிலைகளால் காயத்தை அலம்பித் துணியால் நன்றாய்க் கட்டி விட்டான்; பிறகு அக்குழியிலிருந்து அப்பிச்சைக்காரனை வெளியில் எடுத்து அவனுக்கு ஆகாரம் கொடுத்ததும், அவன் வலியெல்லாம் பறந்து போய்ச் சந்தோஷத்துடன் சந்திரசேகரனை நமஸ்கரித்து நன்றாய் ஆசீர்வாதம் செய்துவிட்டுத் தன்வழியே நடந்தான். இதைப்பார்த்துக்கொண்டிருந்த பிராமணர் ஆச்சரியப்பட்டு "இவ்விஷயம் அரசனுக்குத் தெரிந்தால் உன்னைத் தமது முக்கிய வைத்தியராய் நியமித்துக் கொள்வார்" என்றார்.

மறுநாள் காலையில் ஏற்கனவே வந்த அரண்மனைக் காவலாளிகள் மறுபடியும் ஆச்ரமத்தையடைந்து சந்திரசேகரனைப் பார்த்து "மஹாராஜா உத்தரவு; நேற்று அவரிடத்தில் இங்கு நடந்த விஷயங்களையெல்லாம் சொன்னதில் புத்திக் கூர்மையுள்ள தங்களைக் காண அதிக ஆவலுள்ளவராய்த் தங்களைக் கையோடு அழைத்து வர ஆஞ்ஞாபித்தார்" என்றார்கள். சந்திரசேகரன் சம்மதிக்கவே, பெரியவர் மனவருத்தத்துடன் அவனைவிட்டுப் பிரிய வேண்டியிருப்பதற்காக ஏங்கி அவனுக்குச் சில மந்திரோபதேசங்களைச் செய்து அவனை ஆசீர்வதித்துச் சிப்பாய்களுடன் அரண்மனைக்கு அனுப்பினார்.

மஹாராஜாவிற்கு மார்பில் வெகுநாளாய்ப்பிளவை ஒன்று உண்டு. அதற்கு அநேக வைத்தியங்கள் செய்து பார்த்தும் ஒன்றும் பயன் படவில்லை. சந்திரசேகரன் அவ்விடம்சேர்ந்ததும் அரசன் அவனைப்பார்த்து முதல் நாள் நடந்த விஷயங்களையறிந்து சந்தோஷப் பட்டு "உனக்கு வைத்திய சாஸ்திரம் தெரியுமோ?" என்றுகேட்டார். சந்திரசேகரன் தன் பிதாவைக்கண்டு கொண்டாலும் அவர் தன்னை யடையாளம் கண்டு பிடிக்காதபடி மாற்றுக் குரலுடன் 'தெரியும்' என்று மரியாதையாய்ப் பதிலளித்தான்.

அதற்குமேல் சந்திரசேகரன் ஒருவித மூலிகையினால் பிளவையின்மேல் ஒத்தடம்போட்டு, தன் பசைக்கல்லால் அதன் விஷயங்களை நன்றாய் அறிந்து ஒரு தொட்டியில் வெந்நீர் வைத்து அதில் அரசனை இறங்கச்சொல்லி அநேகவித பச்சிலைகளால் ஊற வைக்கப்பட்ட ஜலங்களைக் கொதிக்கவைத்து அப்பிளவையின் பேரில் ஊற்றிக்கொண்டேயிருந்து, சமயம் பார்த்துத் தன் கூர்மையான கத்தியால் அதைக்குத்தி அதன்மேல் இன்னும் அதிக ஜலம்விட்டு அதிலுள்ளது வடியும்மட்டும் கொட்டிக் கொண்டிருந்தான். அரசனுக்கு வலியே தோன்றவில்லை. சஸ்திரப்பிரயோகம் நடந்தது கூடத்தெரியாது. பிறகு அரசனைவெளியில் வரச்செய்து ஒருநொடியில் ஸ்வஸ்தமாக்கும் மூலிகைகளால் பிரயோகம் செய்து அந்தப் பிளவையிருந்த இடமே தெரியாமல்செய்து ராஜனைப்பார்த்து "எங்கே பிளவை பாருங்கள்?" என்றான்.



அரசனுக்கு வலியெல்லாம் நீங்கியது. அவன் கண்ணாடி கொண்டுவரச்சொல்லி எவ்வளவுதான் அதன் வழியாய் உற்றுநோக்கியும் பிளவையிருந்த இடமே தெரியவில்லை. அரசனுக்கு அதிக சந்தோஷமுண்டாய் "அப்பா, நீ சிறுபாலியனாய்த் தோன்றுகிறாயே? இதற்குள்ளே இவ்வரிய வித்தைகளெல்லாம் எங்குகற்றாய்? உன் பெயரென்ன? நீ எந்த ஊர்?" என்றார்.

அதற்குச் சந்திரசேகரன் "தர்மாவதாரமே, நான் என் தந்தையின் வாக்கைப் பரிபாலனம் செய்ததால் எல்லாம் கற்றுணர்ந்தேன். நான் யாத்திரைக்குக் கிளம்பும் பொழுது 'நீசெல்கிற விடமெல்லாம் இதராளிடம் மரியாதையுடனும் வணக்கத்துடனும் நடந்துகொள். உன்னைவிட அதிகம் தெரிந்தவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்களைப் பூஜித்து நட. ஒவ்வொருவரிடத்திலும் உனக்குத் தெரியாத விஷயங்களிருந்தால் அவைகளைக் கற்றுக்கொள். உன்னைச் சுற்றிலும் நடக்கும் விஷயங்களில் உன்கவனத்தை நன்றாய்ச்செலுத்தி உன் புத்தியை நன்றாய் உபயோகித்துப் பிழை!' என்று என் பிதா எனக்கு அளித்த புத்திமதியால் நான் இவையெல்லாம் அறிந்து உணர்ந்தேன். 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்ற பழமொழியும் பொய்யாகுமோ?" என்றான்.

இதைக்கேட்ட மகாராஜனுக்குச் சந்தோஷமும் ஆச்சரியமும் அதிகமாய் "அப்பா, குழந்தாய், உன்னைத் திரும்பியடைய இவ்வளவுகாலமாகியது" என்று சந்திர-

சேகரனைக் கட்டியணைத்து ஆனந்த மிகுந்தவனாய் அவனைத் தன் முதல் மந்திரியாகவும், முக்கியவைத்தியனாகவும் நியமித்து ராஜ்ய பரிபாலனம் செய்தார். சந்திரசேகரனும் தன் மூன்றுபிராமணக் குருக்களையும் காட்டு ஜாதித்தலைவனையும் வரவழைத்து அவர்களைச் சந்தோஷப்படுத்தி மரியாதைசெய்து மிக வணக்கத்துடன் நெடுநாள் கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தான்.

---

## கல்வியின் அருமையும், அதைக் கற்றோர் பெருமையும், கல்லாதார் சிறுமையும்.

செல்வம், கல்விச் செல்வம் பொருட் செல்வம் என இருவகைப்படும். ஆனால் கல்விச் செல்வமே பொருட் செல்வத்திலும் மேன்மை வாய்ந்தது. ஏனெனில் கல்விச் செல்வமே இம்மை மறுமை இவ்விரு பயன்களையும் தரத்தக்கது. பொருட் செல்வமோ சகடக்கால்போல் மாறிமாறி ஒருவரிடமும் நில்லாது இம்மையில் இன்பம் தருவதுபோல் காட்டி துன்பத்தை விளைவிக்கும் தன்மையுடையது.

கல்வி என்பது 'கல்'என்ற பகுதியினடியாகப் பிறந்து 'வி' விகுதி பெற்றுத் தொழிற்பெயராகிக் கற்கப்படுவன யாவற்றையும் குறிக்கும். இத்தகைய கல்வியைக் கற்றவர்களுக்கு அவர்களை அழகுபடுத்த பொருட் செல்வத்தாலாகிய ஆபரணங்கள் ஒன்றும் வேண்டுவதில்லையாம். ஏனெனின் 'கற்றோர்க்குக் கல்வி



நலனே கலனல்லால் மற்றோரணி கலவேண்டாவாம்" என ஆன்றோர் கூறியுள்ளார். மற்றும் இக் கல்விச் செல்வமானது மற்றையபொருட்செல்வத்தைப்போல் அழியும் தன்மையதல்ல. ஆகவே ஆன்றோரும் "வெள்ளத்தால் போகாது, வெந்தழலால் வேகாது, வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது கள்ளர்க்கோ மிகவரிது, காவலோ மிகவெளிது, கல்வியென்னும் உள்ளத்தே பொருளிருக்க, உலகெலாம் பொருள்தேடி உழல்வதேனோ" என்று பகர்ந்துள்ளார்.

கல்வி கற்றோர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவராயினும் மேன்மைப்படுத்தப்படுகின்றனர். இக் கருத்துக் கொண்டே, "கடைநிலத்தோராயினும் கற்றறிந்தோரைத் தலை நிலத்து வைக்கப்படும்" என்றும்; "எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும் அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்" என்றும் பெரியோர்கள் உரைத்திருக்கின்றனர். கல்வியைக் கற்காதவர் மேற்குலத்திற் பிறந்தோராயினும் "நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன் கற்றிலன் ஆயின் கீழிருப்பவனே" என்றும் அதிவீரராமபாண்டியர் சொல்லியவாறு நன்கு மதிக்கப்படமாட்டான்.

இத்தகைய பெருமை வாய்ந்த இக்கல்வியைப் பிறத்தற்கரிய மானிட ஜன்மமெடுத்த நாம் கற்க வேண்டியது அத்தியாவசியம். இதைக் கற்கவேண்டிய காலமும் இளமையே. ஏன் எனின் கல்விக்குச் சேம

பேதைத்தனமும், கவலையும் விரோதிகள். இவைகள் இளமைப் பருவத்தில் எவருக்கும் கிடையா. ஆகவே ஔவைப் பிராட்டியாரும் 'இளமையிற் கல்' எனக் கூறியுள்ளார்.

கல்விச் செல்வத்தைக் கைப்பற்றியவர்கள் எவ்வகையிலும் பெருமை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. சாதாரணமாக மானிடராய்ப் பிறந்த நாம் இரண்டு கண்களைக் கொண்டிருக்கின்றோமல்லவா? இவை கற்றவரிடமிருக்குமானால் கண்ணெனவும் கல்லாதாரிடம் இருக்குமாயின் புண்ணெனவும் சொல்லப்படும். இது பற்றியே திருவள்ளுவ நாயனாரும், "கண்ணுடையரென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" எனக் கூறியிருக்கின்றார். மன்னும் கற்றவர்களுக்கு அரசனினும் மதிப்பதிகமுண்டு. இது பற்றியல்லவோ "மன்னர்க்குத் தன்றேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்றவிடம் எல்லாம் சிறப்பு" எனக் கூறப்பட்டிருக்கின்றது. கற்றோர் அஞ்ஞானம் என்னும் கடலினின்று மேறக் கல்வியென்னும் தோணியுளது.

இவை நிற்கக் கல்லாதார் கற்றவரைச் சேர்ந்தொழுகின் பெருமையடைவார் எனின் கற்றவரின் பெருமை எத்தன்மைத்தென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகவே நாலடியாரும் "கல்லாரே யாயினும் கற்றோரைச் சேர்ந்தொழுகின் நல்லறிவு நாளுந் தலைப்படுவர்" என்று கூறியுள்ளார்.



கற்றவர் பெருமையையும் கல்லாதார் சிறுமையையும் நன்கு விளக்க ஈண்டு ஒரு சிறு கதை வரைவாம் :—

ஓர் ஊரில் ஓர் அரசனிருந்தான். அவன் நீதி வழுவாமல் செங்கோல் செலுத்தி வந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகளிருந்தார்கள். அவர்களில் முதல்வன் மந்தகுணமுடையவன். இளையவனோ சுபாவமாகவே சுறுசுறுப்பு வாய்ந்தவன். ஒருநாள் அரசன் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கையில் ஒரு சந்நியாசி வந்தார். அரசன் அவரை நல்வரவு கூறி ஆசனம் அளித்தனன். சந்நியாசியும் அரசனுக்கு ஆசி கூறி, "கல்வியே கைகண்ட பொருள்" என்பதை நன்கு விளக்கியதுமன்றி அதைப் பரீக்ஷிக்கவேண்டின் அவனிரு பிள்ளைகளுதவியைக் கொண்டே யறியலாமென்றும் கூறினார்.

அவ்வாறே அரசன் தன் மூத்த குமாரனுக்குப் பொருட் செல்வம் * தந்து தனவானாக்கி, இளையவனுக்கு நல்ல குருவிடம் அனுப்பி கல்விச் செல்வத்தைக் கற்றுக் கொடுத்து வித்வானாக்கினான். நாளடைவில் மூத்தோன் அறிவின்றித் துஷ்டருடன் சேர்ந்து செல்வத்தைக் காக்கும் திறனின்றி செல்வத்தை இழந்து கடன் வாங்கிக் கடுங்காவலிலும் வைக்கப்பட்டான். இளையவனோ கல்வியில் கைதேர்ந்து யுவராஜாவாயினான். யுவராஜாவானதும் தன் தமையன் கடுங்காவலிலிருப்பதை யறிந்து அவன் கடனை ஒழித்து

அவனைக் கடுங்காவலினின்றும் மீட்டுத் தன்னிடமே வைத்துக்கொண்டான். அரசனும் கல்வியே கைகண்ட பொருளென்பதை நன்குணர்ந்தான்.

K. S. மணவாளன்.

---

## இரவு முகமானாலும் குளிர்ந்தமுகம் வேண்டும்.

அல்லது

### நல்லதம்பி

செல்வக்குமார பாளையம், என்ற ஊரில் செல்வச் சீமானும், தர்மவானுமான, நல்லதம்பி என்பார் ஒருவர் இருந்தார். அவர் அன்பு நிறைந்தவர். ஏழைகளுக்கு இல்லையென்றது கொடுக்கும் இயல்புடைய தாதா. பிறர் அபாயங்கண்டு இரங்கும் பேரறிவாளர். அவரை அவர் காலத்திருந்தார் யாவரும் தெய்வமென மதித்து அன்பு பாராட்டி வந்தனர். அவருக்குச் சிறிது மனவருத்தம் நேர்ந்தாலும் ஜனங்கள் தங்கள் அருயிரையும் திருணமென மதித்துக் கொடுத்தாகிலும், அவரை அவ் வருத்தத்தினின்றும் நீக்காமலிரார்கள்.

நல்லதம்பி பெண்களுக்குரிய சகல நல்ல இலக்ஷணங்களும் வாய்ந்த வள்ளியம்மை என்



னும் பெண்மணி இல்லறத் துணைவியாக வாய்ந்திருந்தாள். கொண்டவன் மனமறிந்து நடக்கும் அப்பெண்சாதியுடன் நல்லதம்பி பூவும் மணமும்போலவும், நகமும் சதையும் போலவும், ஒருமனப்பட்டு அன்போடு வாழ்ந்து வந்தார். இவர்களுடைய நன்னடக்கைகளையும், மன ஒற்றுமையையும் கண்டு உலகம் இவர்களை மிகவும் வியந்து, புகழ்ந்து கொண்டாடின. இப்படியாகப் பல ஆண்டுகள் சென்றன.

இவ்விதம் எவ்விதக் குறைவுமின்றிச் செல்வராகவாழ்ந்துகொண்டிருக்கையில் சுற்று வட்டங்களிலுள்ள கிராமங்களில் பஞ்ச மிகுதியால் ஜனங்கள் கஷ்டப்படுவதாக நல்லதம்பி கேள்வியுற்றார். பெரியோர் தமக்கு வந்த நோயைப்போல் பிறர்க்கு வந்த நோயைக் கண்டு உள்ளம் அக்னியிற்பட்ட மெய் போன்று உருகுவார்களன்றோ? உடனே அவர் பஞ்சந் தோன்றிய இடங்களுக்குச் சஞ்சாரம் செய்தார். அவ்வவ் விடங்களிலுள்ள ஜனங்களின் பசிக் கொடுமையை அகற்றும்பொருட்டு எவ்வெவ் விதங்களில் உதவி செய்யலாம் என்பதைப் பற்றி ஆராய்ந்து தமக்குள் ஒரு தீர்மானம் செய்துகொண்டார். விலை சகாயமாகப் பற்பல தேசங்களிலுமிருந்து தான்யங்களை ஏராளமாகத் தருவித்தார். எங்கெங்கும் கஞ்சித் தொட்டிகளை ஏற்படுத்தி ஏழைகளின் பசிக் கொடுமைகளைப் போக்கினார். சாதாரண ஜனங்களிடமிருந்து சிறிது பொருள்பெற்றுக்கொண்டு நிரம்ப தான்யங்களை

அளந்து கொடுக்கும்படிக்கு தக்க ஏற்பாடுகள் செய்து வைத்தார். வஸ்திரம் இல்லாதவர்களுக்கு வஸ்திரம் வாங்கி வழங்கும்படி செய்வித்தார். இவ்வாறாகப் பெருமுயற்சி மேற்கொண்டு அப் புண்ணிய புருஷன் ஜனங்களை அவ் வறுமையின் கொடுமையினின்றும் தப்பிப் பிழைக்கும்படி செய்து வந்தார்.

நல்லோர்களை ஈசன் அதிகமாகச் சோதிப்பது வழக்கமேயன்றோ? பாபம்! நல்லதம்பி, இவ்விதம் தர்ம காரியங்களில் ஈடுபட்டு இருக்கையில் அவரது சொந்த ஊரில் அவர் மனைவியார் மறுநாள் ஜுரமாக இருந்து திடீரென மரணமாய் இறந்து பட்டார். அவ் வம்மையின் நிமித்தம் ஊர் முழுவதும் துக்க சாகரத்துள் ஆழ்ந்திருந்தது. எனினும் இதனினும் மற்றொரு பெரு விசனம் மகா ஜனங்களின் மனத்தை மிகவும் பிடித்து வருத்தத் தொடங்கிற்று. அதாவது, இந்த மகா துக்க சங்கதியை நல்லதம்பிக்கு மெல்லெனச் சொல்லி அவரைத் தேற்றி பிழைக்கும்படி செய்யவல்லார் யார்? யென்பதைப் பற்றி ஆராய்வதேயாம்.

இறுதியில் யாவரும் கூடி அவ்வூரிலுள்ள குளிர்ந்த முகத்தை யுடையவனும், இருதயமாரச் சம்பாஷிப்பவனும், உதாரனுமான வல்லாளன் என்னும் நாவிதனை அழைப்பித்து "அப்பா, நமது தர்மப் பிரபுவாகிய நல்லதம்பியவர்களின் உயிர் இப்பொழுது உன் கையில் இருக்கின்றது. நீ எப்படியாவது அவர்



இருக்கும் இடத்திற்குச் சென்று, மெள்ள மெள்ளச் சங்கதியை அவருக்கு அறிவித்து, மகானுபாவரான அவர் உயிருக்கு ஹானி நேரிடாதபடி பாதுகாத்து ஊருக்குக் கூட்டிக்கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இது உன்னாலன்றி மற்றவர்களால் ஆகக்கூடிய காரியமல்ல. இத்தனை ஜனங்களின் உயிரையும் உன் கையில் ஒப்புவித்திருப்பதைப் போன்று, அவருடைய விஷயத்தை உன்னிடம் ஒப்புவித்திருக்கின்றோம். நீ எல்லா விஷயங்களும் தெரிந்தவன். உனக்கு அதிகம் சொல்ல வேண்டியது என்ன இருக்கின்றது? எவ்வாறாக வேனும் நல்லதம்பியை நல்லவிதம் எங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பது உன்னுடைய முக்கிய பொறுப்பு" என்று கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கு வல்லாளன் "அந்த தர்மப் பிரபுவின் பொருட்டு எனக்கு இத்தனை சொல்ல வேண்டுமா? என்னால் கூடியவரையில் நான் வஞ்சகமின்றி பாடுபட்டு அவரைத் தேற்றிக் கொண்டுவந்து சேர்க்கப் பிரயாசைப்படுகிறேன். இதனைக் காட்டிலும் சுகிர்தமான வேலை எனக்கு என்ன இருக்கின்றது இவ்வுலகத்தில்? நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். ஆண்டவன் இருக்கின்றான்," என்று சொல்லி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு நல்லதம்பி தங்கியிருக்கும் ஊரை விசாரித்து அறிந்துகொண்டு அவ்விடம் போய்ச் சேர்ந்தான்.

176533

வல்லாளன் எந்தவிதமாக விஷயத்தை அறிவித்து அவரைச் சாந்தப்படுத்தி ஊருக்கு அழைத்துச் செல்வது என்பதைக் குறித்து தீர்க்கமாக ஆலோசித்து தனக்குள் ஒரு முடிவு செய்து கொண்டான். பின்னர் அவர் காலை பாநாரம் அருந்தி சாவகாசமாய்த் தனித்திருக்கும் சமயம் பார்த்து தனது இயற்கையான குளிர்ந்த முகத்தினிடத்தே சிறிது விசனக் குறியைத் தோற்றுவித்தவனாய் அவரைச் சென்று கண்டு, அதிதூரத்தில் இருந்து அவரைத் தொழுது, பணிந்து, கைகட்டி வாய்புதைத்து நின்றுகொண்டிருந்தான்.

அவனைக் கண்டவுடனேயே நல்லதம்பி புருஷிக்கு ஏதோ சொல்லமுடியாத ஒருவிதமான குழப்பம் உண்டாயிற்று. அவன் ஏதோ பெரிய துக்க சமாசாரம் கொண்டு வந்திருக்கின்றான் என்று எண்ணினார். அவர் மனம் மிகுதியும் வேதனைக்குட்பட்டது. அவனை நோக்கி,

நல்லதம்பி:—என்னப்பா சங்கதி, வல்லாளா? ஏன் இவ்வளவு தூரம் வந்தாய்? ஊரில் எல்லோரும் க்ஷேமந்தானே?

வல்லாளன்:—(பணிவுடன், சிறிது இழுத்தாற்போல்) தங்களிடந்தான் வந்தேனுங்கோ.

ந:—என்ன விசேஷம். சீக்கிரம் சொல்லு: ஊரில் எல்லோரும் சௌக்கியந்தானே. வள்ளியம்மை சௌக்கியமா யிருக்கிறாளா?



வ:—ஊரில் எல்லோரும் சுகந்தானுங்கோ. ஆ......று ......நம்......ம......வீட்......டிலே.

ந:—ஆனால் நம்ம வீட்டிலே, என்ன? சீக்கிரம் சொல்லு, என் மனம் பதைக்கின்றது. வள்ளியம்மை சௌக்கியமா யிருக்கிறாளா? இல்லையா? இறந்து போய்விட்டாளா, என்ன? ஐயோ தெய்வமே! எனக் கூறி தத்தளித்துத் தடுமாறிக் கீழே விழப் போனார். (அச்சமயம்)

வ:—இல்லிங்க. அம்மா சௌக்கியமா யிருக்காங்கோ. நல்லா யிருக்காங்கோ.

ந:—ஆண்டவனே! நீதான் துணை. எல்லாம் உன் அருள் (நாவிதனைப் பார்த்து) வல்லாளா, சௌக்யமா யிருக்கிறாளா? சொல்லப்பா. நீ மகானுஜனாக இருக்கவேண்டும். உடம்புக்கு ஒன்று மில்லையே? ஜல்தி சொல்லடா.

வ:—ஒன்றுமில்லேங்க. சௌக்கியமா யிருக்கிறாங்க. பயப்படாதேயுங்க. அம்மா இருக்காங்க. இப்ப நா என்ன சொல்லிவிட்டேனுங்க. நீங்க இதனை வருத்தப்படுறீங்களே. வீணாக மனசை வருத்தப்படுத்தலாமுங்களா. பொறுமையும், சகிப்பும், வீரமுந்தானேங்கோ புருஷ லக்ஷணங்கோ? இப்படி பதறலாமுங்களா?

ந:—சரி அப்பா, அம்மாளைப்பற்றி நான் கேட்ட பொழுது நீ சரியாகப் பதிலளிக்காதது என்னத்

தூக்கி வாரிப் போட்டுவிட்டது. என் ஸ்மரணையே தப்பிவிடும் போலாய்விட்டது. நல்ல வேளையாக ஒன்றுமில்லையென்று சொன்னாயே அதுவே போதும். நிரம்ப சந்தோஷம். வள்ளியம்மை என்ன செய்துகொண்டிருக்கிறாள்? நீ என்ன செய்திகொண்டு வந்தாய்? இனிச் சற்று விவரமாக விளங்கும்படி சொல். நிதானமாகக் கேட்கிறேன்.

வ:—ஒன்றுமில்லைங்கோ. வள்ளியம்மை நாச்சியார் சௌக்கியமாய்த்தான் இருந்தாங்கோ. இப்போ உடம்புக்குக் கொஞ்சம் குணமில்லேன்னுட்டுத் தங்களைக் கையோடு கூட்டிக்கொண்டு வரச் சொன்னாங்கோ. வேறொண்ணுமில்லைங்கோ.

ந:—ஆ! உடம்பு குணமில்லையா? என்ன உடம்புக்கு? எப்பொழுது தொட்டு குணமில்லை?

வ:—அம்மா இருக்கிறாங்கோ. இவ்வளவு தைரியம் கூட வேண்டாமுங்களா? கொஞ்சம் காயலா வாம், கலவரப்படாதேயுங்கோ. ஊருக்குப் போகலாம் புறப்படுங்கோ. பேசிகிட்டே போய்ச் சேரலாம்.

உடனே ஒரு வண்டி போடச்சொல்லி அதில் இருவரும் ஏறிக்கொண்டு ஊரை நோக்கிப் பிரயாணப் பட்டனர். செல்லும் மார்க்கத்தில் நெடுகேயும் நல்லதம்பி கேட்கக் கேட்க வல்லாளன் சாந்தமாகவும்



இனிமையாகவும் வள்ளியம்மை இறந்துவிட்டாளென்பதைச் சொல்லாமலே பல வழியில் போக்குச் சொல்லிவந்து ஊருக்கருகில் வந்ததும் செய்தியை குறிப்பாய் புணர்த்தினான்.

இதைக் கேட்ட நல்லதம்பி சொல்லவொண்ணா துக்கசாகரத்தில் மூழ்கிக் கரைகாணாது வருந்தித் தத்தளித்தார்.

பின்னர், சிறிது நேரத்திற்கெல்லாம் செல்வக் குமாரபாளையம் வந்து சேர்ந்தனர். நல்லதம்பி நடந்த விஷயங்களை முற்றும் உணர்ந்தார். ஊரார் அவர் விஷயத்தில் பெருத்த கவலை கொண்டவர்களாய் தக்கவிதம் நடந்து அவரைத் தேற்றுவிக்க மிக்கப் பிரயாசை எடுத்துக் கொண்டனர். அச்சமயம் அங்கு விஜயம் செய்திருந்த நல்லறிவாளர் ஒருவர் நல்லதம்பியைப் பார்த்து:—

"அப்பனே! பிறந்தவர்கள் யாவரும் ஒருநாள் இறந்தே தீரவேண்டும். இவ்வுலகம் தோன்றின நாள் முதற்கொண்டு பிறந்தவர்களில் கூற்றின் வாய்க்குத் தப்பி உய்ந்துபோனவர் ஒருவருமில்லை. "சாவாத இல்லை பிறந்த உயிரெல்லாம்" என்றார் பெரியோர். சந்தையில் யாவரும் ஒன்றுகூடுவதுபோலவே அவர் அவர்கள் கர்மானுசாரங்களுக்கு ஏடாக இவ்வுலகத்தில் உற்பவித்து ஒன்று கூடுகின்றோம். சந்தையினிடமாக வந்தவர்கள் தங்கள் தங்கள் வேலை

தீர்ந்தவுடன் ஒவ்வொருவராய்ப் பிரிந்து போய்விடுவதைப் போலவே இவ் வுலகத்திலும் அவரவர்கள் கர்மானுசாரங்கள் முடிவடைந்த உடன் ஒரு விநாடியும் நில்லாது பிரிந்துபோய் விடுகின்றனர்:—இறந்து படுகின்றனர்.—இது உலக இயற்கையன்றோ? இறந்து படுதலென்பது நாம் பழைய சட்டையை அகற்றிப் புதிய சட்டையை தரித்துக்கொள்ளுவது போல், ஆத்மாவும், தனது பழைய சட்டையாகிய தேகத்தைக் கைவிட்டு மற்றொரு புதிய யாக்கையைத் தேடிக் கொள்ளுவதேயாம். ஆத்மா நித்தியமானது. இதற்கு இறப்பும் பிறப்புமில்லை. இது அக்னியில் வேகாது. புனலால் நனையாது. காற்றால் உலராது. இதை அழிக்கக் கூடியது இவ்வுலகத்தில் ஒன்றுமில்லை, ஆதலின் அறிவிற் சிறந்த நல்ல விவேகிகள் இவற்றின்பொருட்டுக் கவலை கொள்ளமாட்டார்கள். மணாளிடை கொட்டுண்ட பாலைக் குறித்து நான்கு நாட்கள் இராப்பகலாய் அழுதாலும் பயனுண்டாகுமோ? அதுபோலன்றோ இறப்பதின் பொருட்டு விசனித்தலும்; "புல்லறிவாளன்றோ, மாண்ட பிணத்தின் முன்னர் மாரடித்துச் சாம்பி" வீண்பொழுது போக்குவர்.

"ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்குமது வழியே நாம்போ மளவும்
எமக் கென்னென் றிட்டுண் டிரும்."



என்பது நம்மாதாவின் உபதேசமல்லவா? போனவர்களின்பொருட்டு நாம் செய்யக்கூடியது என்ன இருக்கின்றது? ஒன்றுமில்லை யன்றோ? எனவே இருப்பவர்களின்பொருட்டு நமது கவனத்தைச் செலுத்தி அவர்களுக்கான நன்மைகளைச் செய்துகொண்டு, கடவுளின் திருவடிகளில் மனத்தைச் செலுத்தப் பழகிக்கொள்ளவேண்டும். ஆன்மாக்களெல்லாம் கடவுளினுடைய குழந்தைகளாகும். ஆதலினால், அவைகளின் நன்மையின் பொருட்டு உழைப்பது ஈசனுக்கு உகப்பை யுண்டாக்கும். ஆகவே இறந்தவனின்பொருட்டு அதிக துக்கத்திற் கிடங்கொடுக்காமல், அவனுக்குச் செய்ய வேண்டிய உத்திரக் கிரியைகளைச் சரிவரச் செய்துவிட்டு மற்ற எண்ணிறந்த ஏழைகளின் பொருட்டு உன் கவனத்தைச் செலுத்துவாயாக" என்று உபதேசித்தார்.

இந்த நல்லுபதேசத்தைக் கேள்வியுற்ற நல்லதம்பி, ஒருவாறு மனந்தேறி தம் தர்மபத்தினியின் உத்தரக்கிரியைகளைச் சரிவரச் செய்து முடித்தார். உலக வாழ்க்கை பொய் என்பது உறுதிப்பட, உறுதிப்பட, அவர் மனத்தினிடமாக மேன்மேலும் தர்மசிந்தை தழைத்தோங்கிற்று. முன்னையினும் பதினாயிரம் மடங்கு அதிகமாக அவர் உலகின் நன்மையின் பொருட்டு உழைத்துக் கொண்டு பகவானுடைய பாதாரவிந்தத்தில் பதித்த மனமுடையவராய் மக்களின் ஆருயிரென மாந்தர்கள் தம்மைப் போற்ற

சர்ம சொரூபியாயும், சிவஞானச் செல்வராயும் வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு நல்லதம்பி உயிர்பெற்று விளங்கியதற்கு முக்ய காரணம் நம்ம வல்லாளனுடைய குளிர்ந்த முகமும் மேன்மைபொருந்திய இன் சொல்லும், சாதுர்யமும், சமயமறிந்து அதற்குத்தக்க நன்மையான வழியில் நடந்துகொண்ட தன்மையுமேயாகும். அவ்வாறின்றி எவரேனும் அவரிடம் அவர் மனைவியார் இறந்துபட்ட செய்தியை "உங்களுடைய மனைவியார் காலஞ் சென்றாரெ"ன வெட்டெனக் கூறியிருப்பார்களேயாயின் 'ஆ' என்ற சப்தத்துடன் அவர் ஆவி அடங்கியிருக்கும். "இழவுமுகமானாலும் குளிர்ந்த முகம் வேண்டும்" என்பது இது கருதியே எழுந்த ஒரு பழமொழிபோலும்!

இதனால் எப்படிப்பட்ட அரிய பெரிய காரியமும் இன்முகத்தோடும் நன்மொழியோடும், சந்தர்ப்பங்களுக்குத் தக்கவிதம் நன்மையான வழியில் நடந்து சாதித்துக்கொள்ளுவதற்குரியது, என்பது நன்றெனத் தெளியப்படும்.

வல்லாளன் வள்ளியம்மை இறந்திருக்கவும் உண்மை கூறாது மறைத்துக் கூறியது பொய்மையாகாதோ? எனின் ஆகாது. குற்றந் தீர்ந்த நன்மை பயக்குமாயின் பொய்மையும் வாய்மையேயாகும். ஆதலினால் இதை,



"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்னும் தமிழ்மறை கொண்டு தெளிக.

ஆதலால் யாவரும் நண்ணிய கருமத்தையும் எண்ணித் துணிந்து நன்முகத்தினையும் இன்மொழியையும் கொண்டு சந்தர்ப்பங்களுக்குப் பொருந்த நன்மையான வழியில் நடந்து தங்கட்கும் பிறர்க்கும் ஆக்கந் தேடிக்கொள்ள முயல்வார்களாக.

"இன்சொல் இனிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது"

சுபம்!!

சே. ரா. கணபதி சுப்ரமண்ய அய்யர்

---

# ஞானகிராமன்
## அல்லது
# வைத்யமேனயம்

முன்னொரு காலத்தில், ஞானகிராம் என்னொரு வாலிபன் கோலார் தங்கச்சுரங்கத்தில் வேலையிலிருந்தான். அவன் கொஞ்சம் சாய்ந்தாற்போல் நடப்பான். அதனால் அவனுக்கு நொண்டி ஞானகிராம் எனப் பெயர் வழங்கலாயிற்று. பெரிய உத்யோகஸ்தர்களின் குதிரைகளுக்கு புல், கொள் முதலியவைகளைக் கொடுத்து இரக்ஷிப்பதுதான் அவன் வேலை.

அவன் இராக்காலங்களில், சுரங்கத்திற் கருகிலுள்ள குடிசையில் தான் உறங்குவது வழக்கம். அவன் ஒருநாள் காணாமற் போய்விட்டான்! அவன் எங்கு சென்றான் என்று ஒருவராலும் ஊகிக்கமுடியவில்லை. அவன், இப்படி திடீரென்று காணாமற் போகவே மற்ற சுரங்க வேலையாட்கள் ஜானகிராமனைப்பற்றி அநேக கட்டுக் கதைகள் கட்ட ஆரம்பித்தனர். அநேகர் தன்வேலை பிடிக்காமல் அவன் எங்கேயோ ஓடிவிட்டான் என்றனர். அவன் எப்படி ஓடிப்போனான்? எங்கு ஓடிப்போனான்? ஏன் ஓடிப்போனான்? என்னும் கேள்விகளுக்குப் பதில் அகப்படாதது மிகவும் ஆச்சரியப் படத்தக்கதாகவே இருந்தது. ஆனால், இச்சம்பவம் நிகழ்ந்து, நாட்கள் பறந்து, மாதங்கள் சென்று, வருஷங்கள் கழியவே, சுற்று வட்டத்திலுள்ளோர் இவனைப்பற்றிச் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கலாயினர். எப்படியோ, இருபத்திமூன்று வருஷங்கள் ஓடி ஒளிந்தன. அப்பொழுது, சில வாலிபர்களும், சீமாட்டிகளும், சுரங்கவேலையின் காட்சியைப் பார்க்க வந்தனர். ஒரு சுரங்கவேலையாள், அவர்களுக்கு ஒவ்வொரு அழகிய இடங்களாய் காட்டிவந்தான். அங்கு வந்த பிரபுக்களில் ஒருவர் இவனைப் பார்த்து, "இங்கு பாறையின் மேல் செதுக்கி யிருப்பது யாருடைய பெயர்?" என்றார். அதற்கு இவன், "இது அநேக வருஷங்களுக்கு முன் சுரங்கத்திலிருந்து ஓடிய ஒரு வாலிபனின் பெயர்," என்றான். அதற்கு அப்பிரபு, "அவ்வாலிபன் ஓடியது நிச்சயம் தானா!" என்றார்.



வேலையாள்:—அவன் ஓடியது நிச்சயம் தான்.

இதற்கு மற்றொரு வயதுசென்ற சுரங்க வேலைக்காரன், "இப்படிப்பட்டவைகளில் நிச்சயம் ஒன்றும் சொல்ல முடியாது" என்றுரைத்து; ஜானகிராமன் மறைந்ததுமுதல் தான் கேள்விப்பட்டதையும் நினைத்ததையும், நம்பினதையும் ஒன்றுவிடாது சவிஸ்தாரமாகச் சொல்லி முடித்தான். ஜானகிராமனின் பிசாசு ஒரு கையில் சங்கிலியை இழுத்துக்கொண்டு, மற்றொரு கையில் ஒரு நீல விளக்கை எடுத்துக் கொ[illegible] நடுராத்திரியில் சுரங்கத்தில் உலாவியதை, அவ[illegible] மறைந்த பத்துப், பதினைந்து நாட்களுக்கெல்லாம் தான் நேரில் பார்த்ததாக எக்காளிகோவிலிலும் சத்தியம் செய்வேனென்றான்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பிரபு சிறித்துவிட்டுத் தனக்கும் ஜானகிராமனின் பிசாசுக்கும் ஏதாவது ஜாடை ஒத்திருக்கின்றதா? என்று கேட்டார். எல்லோரும் அக்கனவானை உற்றுப் பார்த்தனர். என்ன! ஆச்சரியம்!

(இன்னும் வரும்)

நண்பன்.

# ஹாஸ்யத் துணுக்குகள்

ஓர் ஊரில் கமலநாதன் என்றொருபையனிருந்தான். அவன் மிகவும் டம்பீக முள்ளவன். தான் மிகவும் பெரியவனெனப் பாசாங்கு பண்ணுவான். அவன் ஒருநாள் ஒரு பிரபலமான அம்பட்டன் சாவடிக்குச்சென்று மிகவும் அவசரமாய்; "ஏ, பரியாரி என் தாடியைச்சிரைத்துவிடு" என்று உரக்கச் சொன்னான். அவ்வம்பட்டன் ஒரு வேடிக்கை பண்ணவேண்டுமென்று நினைத்து, அப்பையனின் மோவாக்கட்டையில் சோப்புதடவிக் கத்தியைத் தீட்டி வைத்துவிட்டு ஒரு சிநேகிதனோடு பேசிக் கொண்டிருந்தான். பையன் ரொம்பநேரம் உட்கார்ந்து பார்த்துவிட்டு [illegible] க முடியாமல் கோபங்கொண்டு, "என்னடா [illegible] நேரம், யாருக்காகக் காத்திருக்கிறாய்?" என்றான். அதற்கு அவ்வம்பட்டன் "நான் காத்திருப்பது உங்கள் தாடிக்காகத்தான்!" என்றான்.

* * *

ஒரு மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டில், இரண்டு அக்கம் பக்கம் நிலக்காரர்களுக்குள் ஏற்பட்ட ஒரு தகராறிலிருந்து உண்டான அடிதடிக் கேஸ் விசாரணை நடந்தது.

வக்கீல் (சாக்ஷிக்காரனை நோக்கி) எதிரி வாதியை அடித்ததை நீ பார்த்ததாகச் சொன்னாயே? அவர்கள் எங்கே சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்? நீ எங்கே நின்று கொண்டிருந்தாய்?





சாக்ஷி;—"நான் வாதி நிலத்திலிருக்கும் குட்டிசுவரண்டை நின்னுக்கிட்டு வக்கல் போரிலிருந்து மாட்டுக்கு வக்கல் எடுத்துக் கிட்டிருந்தேன். அவங்கள் சண்டை போட்டது எதிரி நிலத்திலிருக்கும் பாழுங் கிணத்துக்குப் பக்கத்திலே தான்.

வக்கில்:—நீ நின்ற இடத்துக்கும் அவர்கள் சண்டைபோட்ட இடத்துக்கு முள்ள தூரமென்ன?

சாக்ஷி.—அதான் நான் சொல்லி விட்டேனே சாமி, குட்டிச்சுவரண்டை நான் நின்னுக்கிட்டிருந்தேன். பாழுங் கிணத்தண்டை அவர்கள் சண்டை போட்டாங்கோ?

வக்கீல்:—குட்டிச் சுவரும் பாழுங் கிணறும் எங்கே இருக்கு எப்படியடா தெரியும்? அடிக்கணக்கு [illegible] தூரமாய் எவ்வளவு தூரத்திலிருந்து நீ எதிரி வாதியை அடித்ததைப் பார்த்தாயென்று சொல்ல வேண்டும்.

சாக்ஷி;—அந்தக் கணக்கை நான் கண்டபடி சாமி. எஜமாங்கள் தான் குட்டிச்சுவரின்னு வச்சிக்கிட்டா, வக்கலய்யா தான் பாழுங்கிணறு, என்று இரண்டு பேரையும் சுட்டிக் காட்டித் தூரத்தை விளக்கிறான்.

மாஜி:—இவனென்னடா சுத்தக் குசப்பயலாயிருக்கிறான்.

சாக்ஷி:—எசமாங்கள் சொன்னது சரிதான்சாமி.

(இவன் சாதியில் குயவனே.)

## மனக்கணக்கு

உபாத்தியாயர்:—கோபாலா, நீ உன் ஸ்நேகிதன் ராமய்யாவுக்கு ரூபா 5 கடனாகக் கொடுத்து அந்தத் தொகையை அவன் மாதமொன்றுக்கு 5 அணா விகிதம் திருப்பிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டானேயாகில், 9 மாதங்கள் கழிந்த பிறகு கடன் தொகை பாக்கி என்ன நிற்கும்? சீக்கிரம் ஒருநொடியில் பதில் சொல்ல வேண்டும்.

கோபாலன்:—(சற்றும் யோஜனையின்றி) ரூபாய் 5 ஸார்.

உபா:—நீ என்ன மடையனாயிருக்கிறாய் னக்குக் கொஞ்சமும் கணக்கு வாஸனை து கிடையாதே. பெஞ்சியில் ஏறு.

கோபா:—அதிருக்கலாம் ஸார்—எனக்குக் கணக்கு அதிகமாகத் தெரியாமலிருக்கலாம். ஆனால் என் ஸ்நேகிதனை நான் நன்றாய் அறிவேனாதலால் கொஞ்சமும் யோஜனையின்றித் தமக்கு அவ்வாறு உடனே பதிலளிக்க நேரிட்டது. மன்னிக்கவும்.

உபா:—நீ குறும்பன்.

PRINTED AT THE 'VAVILLA PRESS' MADRAS—1926.

176533